# தமிழரசு

1.11.1996 ரூ.3




CORPORATION OF CHENNAI

## இந்த இதழில்....


பன் மாநில மன்றக் கூட்டத்தில் முதல்வர் உரை **2**

உள்ளாட்சித் தேர்தல்கள்:ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் **6**

ஞாலத்தின் தலைவர் **10**

வாழ்க்கைக் கலை - அரசு மணிமேகலை **12**

வீரமாமுனிவர் **17**

இல்லற சந்நியாசி - தி. ஜானகிராமன் **18**

கணிப்பொறியின் கதை **33**

மலேரியா - மருத்துவக் கட்டுரை **34**

தித்திக்கும் திராட்சை **40**

மாநகராட்சி மேயர்களின் வாழ்க்கைக் குறிப்பு **46**



# தமிழரசு

**திருவள்ளுவராண்டு - 2027**

**ஐப்பசி திங்கள்: 16**

**மலர் :27 இதழ் : 9**

**1.11.1996**

**விலை ரூ. 3.**

# நம் கூட்டாட்சி அமைப்புத் தவறுகள் முறைப்படி களையப்பட வேண்டும்

- முதல்வர் கலைஞர்

"பன்மாநில மன்றத்தின் இரண்டாவது கூட்டத்தில் பங்கு கொள்வது எனக்குப் பெருமையையும், பெருமகிழ்ச்சியையும் அளிக்கிறது. ஏனெனில், ஏறத்தாழ ஆறாண்டுகளுக்கு முன்னர் 1990 அக்டோபரில் நடைபெற்ற முதலாவது கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளும் பேறு பெற்றிருந்தேன். அன்று, பன்மாநில மன்றத்தை ஏற்படுத்திய தேசிய முன்னணி அரசு, அதற்குச்சிறிது காலத்திற்குப் பின்னர் பதவியிழந்தது.

அதனையொட்டி, அந்த அரசு உருவாக்கிய பன்மாநில மன்றமும் அடுத்து வந்த ஐந்தாண்டுகளாகச் செயல்படாமலிருந்தது. உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நிறுவ வேண்டும் என்ற இலட்சியத்தில் உறுதி பூண்டுள்ள தி.மு. கழகமும், ஏனைய கட்சிகளும் பங்கு பெற்றுள்ள ஐக்கிய முன்னணி அரசு, பன்மாநில மன்றத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது பொருத்தமானதாகும். இந்த இனிய சந்தர்ப்பத்தில், குறிப்பாக டாக்டர் ஃபரூக் அப்துல்லா அவர்களை நான் வருக. வருக என வரவேற்கிறேன். நாங்கள் இருவரும் இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியிலும் வடகோடியிலுமுள்ள இரு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பதோடு, நாங்கள் கூட்டாட்சித் தத்துவத்தை மிகவும் உறுதியோடு வலியுறுத்தி வந்துள்ளவர்கள் ஆவோம்.

இந்தப் பன்மாநில மன்றத்தில் உரையாற்றக்கிடைத்துள்ள இந்த வாய்ப்பின்போது, இந்த மன்றத்தைக் கூட்டாட்சி மன்றமென்று பெயரிட்டழைக்க நான் விரும்புகின்றேன். இதே சமயம், நமது அரசியலமைப்புச் சட்டத்தில் இழையோடிக்கிடக்கின்ற கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான, மற்றும், ஜனநாயகத் தத்துவத்திற்கு விரோதமான அம்சங்களால் மிகமிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

ஏன் அவ்வாறு சொல்கிறேன் என்றால், மிகவும் மோசமானது என்று பெயர்வாங்கியுள்ள அரசியலமைப்புச்சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ் நான் முதலமைச்சர் பதவியிலிருந்து இரண்டு முறை பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளேன். இந்த முறையில் அடைந்த 'பதவி நீக்கப் பெருமை' எனக்கு மட்டுமே கிட்டிய தனிச் சிறப்பாகும். இந்திய மாநிலங்களிலேயே, சட்டமன்றப் பேரவையில் மிகப் பெரும்பான்மை பெற்றிருந்த அரசாக இருந்தும், மாநில ஆளுநருடைய அறிக்கை பெறுகின்ற வழக்கத்தைக் கூடக் கடைப்பிடிக்காமல் விட்டு விட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்ட மாநில முதலமைச்சர் நான் மட்டுமே, என்று நம்புகிறேன்.

ஏனென்றால், அரசியலமைப்புச்சட்டத்தின் 356-ஆம் பிரிவின் விதித்துறையில் இடம் பெற்றுள்ள ''வேறு வகையில்'' என்னும் சொற்பொருளைப் பயன்படுத்தி, அப்போதைய ஆளுநர்கூட, அறிக்கை ஒன்றை எனது அரசுக்கு எதிராக அனுப்ப மறுத்துவிட்டார் என்பது நாடறிந்த செய்தியாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான சில கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை குறித்து அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் கொண்டுவர வேண்டியது மிக அவசரத் தேவையாகும். கூட்டாட்சித் தத்துவத்திற்கு விரோதமான அம்சங்களாவன:

★ மாநிலங்கள் மீது குடியரசுத் தலைவராட்சியைத் திணித்தல்;

★ மாநிலங்களில் ஆளுநர்களை நியமித்தலும் அவர்களின் பங்கும்;

சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் காணும் பொருந்தாத் தன்மைகள்;


★ மாநிலச் சட்டமுன் வடிவுகளுக்கு மத்திய அரசு (குடியரசுத் தலைவரின்) ஒப்புதல் அளிக்க மறுக்கும் மறுப்பதிகாரம்.

★ நிதிவாயில்களை ஒதுக்கீடு செய்வதில் குறைபாடுகள்.

இவை எல்லாம், இன்று நடைமுறையிலிருக்கிற இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான ''கூட்டாட்சியமைப்புத் தவறுகள்'' அல்லது ''கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான அம்சங்களாகும்'' இவையாவும் உரிய நடவடிக்கை வாயிலாகக் களையப்படுதல் வேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியமைப்பிற்கு உகந்ததாகக் கருதப்பட வேண்டுமெனில், இந்தக் குறைந்தபட்ச நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்னும் எஞ்சி நிற்கும் அதிகாரங்கள் குறித்து ஆய்வு செய்தல் போன்ற ஏனைய பிற பொருள்களும் நம்முன் உள்ளன என்பதில் ஐயமில்லை. இவற்றுள் மிகமிக இன்றியமையாதது, வரி வருவாய்த் துறையில் மாநிலங்களுக்குத் தன்னாட்சியுரிமை வழங்குவதாகும். இத்துறை முழுவதையும் குறித்து இன்று ஆய்வு செய்வது அவசரத்தேவையாகும். புதிதாக உருவாகியுள்ள ஒத்த கருத்துடையார் அரசியல் ஓங்கியுள்ள சூழலில் இந்தச் சீர்த்திருத்தங்கள் யாவும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1971 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த தி.மு.க. அரசு அப்போதைய சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி டாக்டர். பி.வி. இராஜமன்னார் தலைமையில், மத்திய-மாநில அரசு உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்தது. இந்திய நாட்டில் மத்திய - மாநில அரசு உறவுகள் குரித்து விரிவாக மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு அதுவேயாகும்.



அந்த ஆய்வு, ஒரு மாநில அரசின் மூலம் தொடங்கப் பட்டது என்பதைக் கருதிப் பார்க்கையில், அது இன்னும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்ததாகிறது. இராஜமன்னார் குழு அறிக்கை குறித்து, தமிழ்நாடு அரசு எடுத்த கருத்து முடிவுகளின் அடிப்படையில் மாநிலச் சட்டமன்றப் பேரவை 1974ஆம் ஆண்டில் மாநில அரசின் தன்னாட்சி உரிமை குறித்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அப்போது தொடங்கி, ஏனைய பல மாநில அரசுகளும், அரசியல் கட்சிகளும் மாநில அரசுகளுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள், பொறுப்புகள், நிதிவாயில்கள் வழங்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கை முழக்கத்தை எழுப்பி வந்திருந்தன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மாநில அரசின் தன்னாட்சி உரிமை குறித்துத் தீர்மானம் இயற்றிய நாள், தொடங்கி, மற்ற மாநில அரசுகளிடமிருந்து தொடர்ந்து எழுந்துவந்த வலுவான கோரிக்கைகளுக்குக் காலம் தாழ்த்தி செவிசாய்த்தவகையில் தான், 1983 ஆம் ஆண்டில் சர்க்காரியா ஆணைக்குழுவை மத்திய அரசு அமைத்தது எனலாம்.

இந்த மன்றத்தின் முதலாவது கூட்டத்தில் பேசுகையில், மாநில அரசுகள் இதுகாறும் பெரிய அளவில் தன்னாட்சி உரிமைக்காகச் சட்டப்பூர்வமான முறையில் கருத்துத் தெரிவித்தும் குரல் எழுப்பியும்

வந்தமைக்குப் போதுமான அளவில், அவற்றின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் சர்க்காரியா ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இல்லை என்று நான் சுட்டிக்காட்டியிருந்தேன். எனவே, மாநில அரசுகளின் கோரிக்கைகள் எவற்றையும் வலுவிழக்கச் செய்வது என்கின்ற வினாவிற்கு இடமேதுமில்லை. மாறாக, மாநிலங்களுக்கு அதிக அளவில் தன்னாட்சி யுரிமை அளிக்கும் வகையில் கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகளை மேலும் சீரான முறையில் செயலாக்க முயலவேண்டும். மேலும், சர்க்காரியா கமிஷன் அதன் அறிக்கை களைக் கொடுத்த பின்னர், கடந்த பத்தாண்டு களில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பல அம்சங்களில் கமிஷன் அளித்த பரிந்துரைகளுக்கு அப்பாற்பட்டும் செயல்பட வேண்டிய அவசி யத்தை ஏற்படுத்தியுள்ளன.

பின்னணி அவ்வாறிருக்க, நாம் பரிசீலிப் பதற்காகவைக்கப்பட்டுள்ளதுணைக்குழுவின் அறிக்கை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்பதை நான் கூற வேண்டியிருக்கிறது. மாநிலங்களும், முக்கிய அரசியல் கட்சிகளும் முன்வைத்த விவாதங்களின் அடிப்படையில், சீரமைக்க வேண்டிய அவசியமுள்ள பிரச்சினை கள் குறித்து சர்க்காரியா கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகளைச் சீரமைக்க முயலாமல், கமிஷன் அளித்த பரிந்துரைகள் அவ்வாறே ஏற்பதில் துணைக்குழு மனநிறைவடைந் துள்ளது.

சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை மாற்றி அமைத்ததன் மூலம் துணைக்குழு, அவற்றைப் பயனற்றதாகச் செய்துள்ளது. அவசர கால விதித்துறைகள் உட்பட பல முக்கியமான பிரச்சினைகளில், துணைக்குழு வினால், ஒருமித்த கருத்து முடிவுக்கு வர இயலவில்லை. இந்தியக்குடியரசுத்தலைவரின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கும், மாநிலங் களுக்கும் இடையிலான நிதி உறவுகள் தொடர்பான பரிந்துரைகளையும், அதனால் செயல்முறைப்படுத்த இயலவில்லை. மன்றத் தில், தற்போதுள்ள உறுப்பினர்கள், துணைக் குழுவில் உறுப்பினராக இல்லாதிருப்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

இந்நிலையில், துணைக்குழு பரிசீலித்த 179 பரிந்துரைகளைப் பொறுத்தவரை, துணைக் குழுவின் கருத்துக்களை மேலும் கருதிப் பார்க்காமல் அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது என நாங்கள் கருதுகிறோம். இதுபோன்ற பன்மாநில மன்றத்தின் ஒருநாள் கூட்டம், இந்தச் சிக்கலான பிரச்சினைகள் குறித்து ஆழ்ந்து விரிவாக விவாதிப்பதற்குப் போதுமானதல்ல. எனவே, இந்தப் பரிந்துரை களை விரைந்து ஆய்வு செய்வதற்கு உட்படுத்து வது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகும்.

அத்தகைய ஆய்வுக்குரிய அடிப்படையாக அமைய, துணைக் குழுவின் பரிந்துரைகள் குறித்து ஒருமாத கால அளவுக்குள் தங்களது கருத்துரைகளை அனுப்பி வைக்குமாறு அனைத்து மாநிலங்களும் கேட்டுக் கொள்ளப் படலாம். குறைந்தபட்ச பொதுவான தேவைத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, அவற்றை நாளது வரையாக்கவும், நிதி அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்துப் பரிசீலிக்கவும், உயர் நிலைக்குழு ஒன்றை நியமிக்க, நிகழ்ச்சி நிரல் குறிப்புகளில் தனியாகக் கருதப்பட்டுள்ளது. மாநிலங்கள் அளிக்கும் கருத்துரைகளின் அடிப்படையில், இக்குழு துணைக் குழுவின் பரிந்துரைகளை மூன்று திங்கள் கால அளவிற்குள் விரைந்து ஆய்வு செய்து, அதன் அறிக்கையை அளிக்க வேண்டும்.

இத்தருணத்தில், நான் சில முக்கியமான பிரச்சினைகள் குறித்து எங்களது கருத்துக் களைச் சுருக்கமாகக் குறிப்பிட விழைகிறேன்.

***சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள்:*** மாநிலங்களின் தன்னாட்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஏழாவது விவர அட்டவணை யிலுள்ள I, II, III மற்றும் பட்டியல்களில் உள்ள பதிவுகள் குறித்து விரிவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும்படி, உத்தேச உயர்நிலைக்குழு

> காலம் மாறக்கூடியது; மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.
>
> **– அறிஞர் அண்ணா**

கேட்டுக் கொள்ளப்படலாம். மாநிலச் சட்ட முன் வடிவுகளுக்குக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் குடியரசுத் தலைவர் இசைவு தெரிவிப்பதை உறுதிசெய்ய, இந்திய அரசமைப்புச்சட்டத்தின் 200 மற்றும் 201 ஆகிய பிரிவுகளில் போதிய காப்பு விதித்துறைகள் சேர்க்கப்பட வேண்டும்.

**நிர்வாகத் தொடர்புகள்:** மாநிலங்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கவும் அரசமைப்புச் சட்டத்தின் அவசரகால விதித்துறைகளைப் பயன்படுத்தவும்; அரசமைப்புச் சட்டத்தின் 256,257 மற்றும் 365 ஆகிய பிரிவுகள் மத்திய அரசுக்கு எல்லையற்ற அதிகாரங்களை அளிக்கின்றன. அவை ரத்து செய்யப்படலாம்.

**ஆளுநர்கள்:** ஆளுநர்களின் தகுதிகள், அவர்கள் நியமிக்கப்படும் முறை, அவர்களுடைய பதவிக்காலம், அவர்களுடைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கான வழிகாட்டிக் குறிப்புகள், அவர்கள், தங்களுடைய விருப்ப உரிமையைப் பயன்படுத்துவது மீது கட்டுப்பாடுகள் விதிப்பது ஆகியவை தொடர்பாக குறிப்பான வரையறைகள், மரபுகள், காப்பு விதிகள் ஆகியவை பின்பற்றப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் திருத்தங்கள் வெளியிடுவதன் மூலமாகவும், ஆளுநர்களுக்கு வழக்கமான உத்தரவுகள் பிறப்பிப்பதன் மூலமாகவும் இயன்றவரையில், இது பின்பற்றப்பட வேண்டும்.

**356 ஆம் பிரிவு :** அரசியல் ரீதியாகவும், 356 ஆம் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்தும் நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. இக்கூட்டத்திற்குப் பிரதிநிதியாக வந்துள்ள ஒவ்வொரு தனி மாநிலமும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஏதேனும் ஒரு சமயத்தில் அதனால் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுவான குறைந்த பட்சத் திட்டமானது, 356 ஆவது பரிவு, தவறாகப் பயன்படுத்தப்படுவதைத்தடுக்க, அது திருத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளது. கூட்டாட்சி என்று கூறிக் கொள்கின்ற அரசமைப்பில், இதுபோன்ற விதித்துறை, உலகில் வேறு எந்த அரசமைப்புச் சட்டத்திலும் இல்லை. எனவே, எனது கட்சி இதனை முழுமையாக நீக்கவேண்டும் என்ற நிலையைக் கொண்டுள்ளது. அந்தசட்டப்பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கும்

> இளைய தலைமுறையே எழுவாய்! செயப்படுபொருள் பயனிலையேல் விழுவாய்! அறிவில் மூத்தோரைத் தொழுவாய்! அரிய பயன்களை ஆழ உழுவாய்!
>
> **– கலைஞர்**

வரையில், அதனைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான தூண்டுதல் எழுவதைத் தடுக்க இயலாது என்பது எங்களுடைய கருத்தாகும். இது குறித்து ஆய்வு செய்யுமாறு உயர் நிலைக் குழு கேட்டுக் கொள்ளப்படலாம்.

**மத்திய - மாநில அரசுகளின் கலந்தாலோசனைகள்:** மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே நெருங்கிய, தொடர்ச்சியான கலந்தாலோசனைகள் இடம்பெற தேசிய வளர்ச்சி மன்றமும், மாநிலங்களுக்கிடையேயான மன்றமும் உயர்நிலை அமைப்புகளாகக் கருதப்பட வேண்டும். இனி வருங்காலத்தில் இம்மன்றங்கள், குறைந்தது ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறையாவது கட்டாயமாகக் கூட வேண்டும். என்பது உயர் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, நாடாளுமன்றத்தில் உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும். இல்லையெனில் இது ஒரு ஐந்தாண்டிற்கு ஒரு முறை கூடும் கூட்டமாக அமைந்துவிடும். அவற்றின் முடிவுகள், மத்திய அரசினைக் கட்டுப்படுத்துவனவாகக் கருதப்பட வேண்டும்.

**நிதியும் திட்டமிடலும்:** இத்தலைப்புகள் குறித்த சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளை உயர்நிலைக்குழு ஆய்வு செய்ய வேண்டியுள்ளன. அனைத்து நிதி ஆதாரங்களிலிருந்தும் மாநில அரசுகளுக்குக் கிடைக்கும் நிதி போதுமானதாக, சரிவிகிதமாக, உறுதியளிக்கப்பட்ட ஒன்றாக, நோக்கங்களை அளவுகோலாகக் கொண்டு வழங்கப்படுவனவாக இருக்க வேண்டும். பத்தாவது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளவாறு, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே பகிர்வு செய்யப்படும் உரிமைப்படியான வரிப் பங்கீடுகளில், மத்திய அரசின் முழு வரி வருவாயினையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மாநில அரசுத் துறையில் உள்ள, மத்திய மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும்

திட்டங்களின் எண்ணிக்கை குறைந்தனவாகக் கருத வேண்டும்; அத்திட்டங்களைச் செயலாக்குவதில் மாநிலங்களுக்குச்சமஅளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இந்தியாவில் கூட்டாட்சி முறை உண்மை யானதாக ஆக வேண்டும். பின் சமாளிக்கப்பட வேண்டிய முதன்மைப் பிரச்சினைகளுக்குரிய விரிவான அணுகுமுறை பற்றிய எங்கள் கருத்துக்களை நான் இங்கு சுட்டிக் காட்டி யுள்ளேன். பல இனங்கள், பல மொழிகள், பல மதங்கள் கொண்ட துணைக்கண்டமாகவுள்ள இந்தியா போன்ற நாட்டில் கூட்டாட்சி முறை மட்டுமே நிலவும் வேற்றுமைகளைப் போக்கி ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக அமையும்.

மாநிலங்களுக்குச் சுயஆட்சி உரிமையுடன் உண்மையான, முழுமையான கூட்டாட்சி முறை ஒன்றைக் கொண்டுவர, புத்துயிரூட்டப் பட்ட பன்மாநில மற்றும் சிறந்த அமைப்பாகத் திகழும் என்றும், இவ்வாறாக, சிறந்த வலிமை யான துடிப்பார்வமிக்க இந்தியாவிற்கு ஒரு உறுதியான அடித்தளமாக அமையும் என்றும் நான் நம்புகிறேன்.

கூட்டாட்சிக் கோட்பாட்டினரின் புரட்சி யானது, தற்போதுள்ள சூழ்நிலையில் உலகின் அமைப்பை மாற்றுகின்ற வகையில் வெளியில் தெரியாமல் நாடிப் பெறுகின்ற பெரும் எண்ணிக்கையிலான பல்வேறு புரட்சிகளில் ஒன்றாகப் பெரும் பங்கு வகிக்கிறது எனப் பேராசிரியர் டேனியல் எல்சன் தெரி வித்துள்ளார். உலகின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 சதவீதத்தினர், தற்போதுள்ள கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இன்னொரு மூன்றாவது பிரிவினர், ஏதாவதொரு வகையில் கூட்டாட்சி முறை ஏற்பாட்டைக் கொண்ட நாடுகளில் வாழ்கின்றனர். மிக நீண்ட காலத்திற்கு முன்பே இந்தியாவில் தோன்றியிருக்க வேண்டிய கூட்டாட்சிப் புரட்சியை நாம் இப்போது உருவாக்குவோம்.

– புது டில்லியில் 15.10.1996 அன்று நடைபெற்ற பன்மாநில மன்றக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.





# உள்ளாட்சித் தேர்தல்கள்

கடந்த செப்டம்பர் மாதம் 3ஆம் தேதியன்று, தமிழ்நாட்டுத் தேர்தல் ஆணையர் திரு. கே. மலைச்சாமி அவர்கள் செய்த முக்கிய அறிவிப்பொன்று தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக விளங்கியது; தமிழக உள்ளாட்சித் தேர்தல் அக்டோபர் 9 ஆம் தேதியும், 12 ஆம் தேதியும் என இரண்டு கட்டமாக நடைபெறும் என்கிற அறிவிப்பே அது.


இப்போதுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு 1990ல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, செப்டம்பர் 26ல் மாநகராட்சி களுக்கான தேர்தல் நடைபெறும் என அப்போது அறிவித்தது; சென்னை - மயிலாப்பூரைச் சேர்ந்த ராஜகோபாலன் என்பவர், பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அதன் அடிப்படையில் 29.8.1990ல், நீதிபதி எஸ். இராமலிங்கம் அத் தேர்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தார். அதோடு சரி; 1968ல் கடைசியாக நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தல் இனி எப்போது நடக்கும் என்பதே யாராலும் நிர்ணயிக்க முடியாத ஒன்றாக ஆகி விட்டிருந்தது.

அந்தத் தேர்தல்தான், தடை பல கடந்து இதோ இப்போது நடந்து முடிந்திருக்கிறது. பெண்களுக்கான இட ஒதுக்கீடு 30 சதவிகிதம் என அறிவித்திருந்தார், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

## பெண் மேயர்கள்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய 6 மாநகராட்சி அந்தஸ்து பெற்ற பெரு நகரங்களுக்கும் மற்ற உள்ளாட்சி அமைப்பு களுக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது.



இவற்றில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஆகிய 2 மாநகராட்சிகளுக்கும் பெண்மணிகளே மேயர்களாக நிற்பதென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல், அவ்விரு மாநகரங்களிலும் பெண்களே அப்பதவிக்குப் போட்டியிட்டார்கள்.

அதன்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக் குத் திருமதி புனிதவல்லி பழநியாண்டியும் திருநெல்வேலி நகராட்சிக்குத் திருமதி. உமாமகேஸ்வரியும் மேயர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

## சென்னை மாநகராட்சி

356 ஆண்டுகாலப் பழமை மிக்கதான சென்னை மாநகராட்சிக்கு, ஏறத்தாழக் கால் நூற்றாண்டுகழித்து மாநகராட்சித் தேர்தல் நல்ல வண்ணம் நடந்து முடிந்திருக்கிறது.

1933 ஆம் ஆண்டுவரை சென்னை மாநகராட்சிக்கான மேயர் இலண்டன் பாணியிலேயே பதவியேற்பது வழக்கமாக இருந்துவந்தது. பின்னர், குமாரராஜா முத்தையா செட்டியார் அவர்கள்தான் எளிமையாக சென்னை மாநகராட்சியின் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அணிந்திருக்கும் 100 பவுன் தங்கச்சங்கிலி அந்நாளில், இவர் செய்தளித்ததே ஆகும்.

1934ல் இருந்து 1972-73 வரை சென்னை மாநகராட்சி 43 மேயர்களை, அதாவது நகரத் தந்தைகளைக் கண்டிருக்கிறது; 44 வதாக 8,24,526 வாக்குகளைப்பெற்றுத் தேர்வு பெற்றிருப்பவர்தான் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், தி.மு.க.



இளைஞர் அணித்தளபதியுமான வணக்கத்திற்குரிய திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள். இவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் புதல்வர் ஆவார்.

தொடக்கத்தில் இப்பதவிக்கு 17 பேர் மனுச் செய்திருந்தனர். முடிவில், திரும்பப் பெற்றவர்களெல்லாம் போக, களத்தில் 8 பேர் எஞ்சி நின்றனர். எழுவரைத் தோல்வியுறச்செய்து திரு. ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்.

இத்தனை மேயர்களில், ஒரே பெண் மேயரைத்தான் 1971-72ல் சென்னை மாநகராட்சி கண்டிருக்கிறது. திருமதி காமாட்சி ஜெயராமன் என்கிற அவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரே.

## மேயர் – துணைமேயர் பதவி

முன்பெல்லாம் மாநகராட்சி உறுப்பினர்களே - அதுவும் சாதி அடிப்படையில் நகரத் தந்தையைத் தேர்ந்தெடுத்தனர்; அப்போதைய விதிமுறைகள் அப்படியிருந்தன. இப்போதோ, மக்களே பொதுத் தேர்தலில் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் முறை அமலாக்கப் பட்டிருந்தது.

நகரத் தந்தைக்கு ஒரு வாக்குச் சீட்டு; மாநகராட்சி மன்ற உறுப்பினருக்கு வேறு ஒரு வாக்குச் சீட்டு.

முன்பெல்லாம் மேயரின் பதவிக்காலம் ஓராண்டுதான்; இப்போதோ மேயர், துணை மேயர் பதவிக்காலம் ஐந்தாண்டுகள்.

ஆனால், சாதி மத அடிப்படையில் இனி மேயர் தேர்தல் நடைபெறாது.

## அறிஞர் அண்ணா பாராட்டு

1957ல் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் பங்கேற்பது என்று திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் முடிவெடுத்தது; இதையடுத்து சென்னை மாநகராட்சியை முதன்முதலில் கைப்பற்றியது.

அந்த மாபெரும் வெற்றிக்குக் கலைஞர் அவர்களே முழுமுதல் காரணகர்த்தாவாக இருந்தார். ஆகவே, அறிஞர் அண்ணா அவர்கள் அதற்கென நடைபெற்ற பாராட்டு விழாவில் கலைஞர் அவர்களுக்குத் தம் அன்பின் பரிசாக மோதிரம் ஒன்றை அணிவித்துப் போற்றிப் புகழ்ந்தார்.

''என் மனைவிக்குக் கூட, நகைக் கடைக்குச் சென்று நான் மோதிரம் வாங்கியதில்லை; இதைத் தம்பி கருணாநிதிக்காகநானே சென்று வாங்கிவந்தேன்'' என்று அப்போது பெருமிதத்தோடும், பெரும் மகிழ்வோடும் அவர் பாராட்டியதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மஞ்சள் நிறச் சால்வையோடு காட்சிதரும் மார்பளவுப் படத்தில், சால்வையை இரண்டுபக்கமும் பிடித்திருக்கும் கைவிரல் ஒன்றில் அந்த அற்புத நினைவுப் பரிசை - கணையாழியை இப்போதும் நாம் காணலாம்.

அப்போது, முதலாவது சென்னை மாநகராட்சி மேயராகத் திரு. அ.பொ. அரசு

தொடர்ச்சி 41ஆம் பக்கம்

# கதர்த்துணிகளை வாங்கி கைவினைஞர்களை ஆதரிப்பீர்!

**முதல்வர் கலைஞர்**


**தா**ய்த்திருநாட்டின் விடுதலைக்காக, அண்ணல் காந்தியடிகள் கதர்த் திட்டத்தைத் துவக்கினார்கள். இந்நாடு விடுதலை பெற்றபின், அண்ணல் காந்தியடிகள் ஆசியுடன் தமிழக அரசு கதர்த் திட்டத்தை அரசின் திட்டமாகச் செயல்படுத்திவருகிறது.

வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அவர்களுக்கு வளமும், நலனும் சேர்க்கக் கிராமப் புறங்களிலே உள்ள மூலப்பொருள்களைக் கொண்டு, மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்க ஏதுவாகக் கதர் கிராமத் தொழில்கள் இயங்கிவருகின்றன.

இவ்வடிப்படையிலேயேதான், ஆண்டுக்கு ஆண்டு, கதர் விற்பனை கணிசமாகப் பெருகிவருகிறது. அதனால், கதர்த் தொழிலில் ஈடுப்பட்டுள்ள மக்கள் நிலையான வாழ்வைப் பெற்றுவருகிறார்கள். கதர் வாங்குவதன் மூலம் செலவிடும் தொகை கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்கு வழி கோலுகிறது. என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



ஏழை மக்களின் அயராத உழைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட கண்கவர் வண்ணங்களில், கதர்த்துணிகள், மெல்லிய வேட்டிகள், துண்டுகள், போர்வைகள், தயாரித்த ஆடைகள், பல நவீனப் பட்டு வகைகள் கதர் அங்காடிகளில் உள்ளன. பொதுமக்கள் அவைகளைப் பண்டிகைக் காலங்களில் வாங்கவேண்டும் என்பதற்காகச் சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.



இந்தச் சிறப்புத்தள்ளுபடியைத் தமிழக மக்கள் பயன்படுத்திக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய கதர்த் துணிகளை வாங்கி, இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலட்சோபலட்சம் கைவினைஞர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

**– அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை.**

# ஞாலத்தின்

மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்
அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக்கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
எண்ணையிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம் எனினும்
எண்ணையிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்!
பணமலைக்கிடையே பிறந்தார், எனினும் ஏழையை அணைக்கும்
குணமலையாகத் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்!
இடி இடிக்கும் பேச்சில் - இளமைத்
துடி துடிக்கும் எழுத்தில் - தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் - அதிர்
வெடி முழக்கும் செயலில் - விடாப்
பிடியிருக்கும் குணத்தில் - விடுதலைக்
கொடியிருக்கும் கையில் - கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்
நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார்... இந்திய
நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும்பகைவர் கடந்தபோது -

# தலைவர்

## முதல்வர் கலைஞர்



என்ன நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும
நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி நேருவானார்!
துணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்
இன்பம் நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும் -
இதனால் 'நேரு மாமா' வானார்.
மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார்!
தன் மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத்
தக்க தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.
காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்
ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக்கொள்வர்! 'இந்திய
ஞாலத்தின் தலைவராய்' ஜவகர் ஆனது இவ்விதமல்ல! அவர்
சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை-
கொள்கை முத்து - கொள்ளேகால் பட்டு-
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி-
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன்-



– சென்னையில் 14.11.1970 அன்று நேரு கண்ட ஜனநாயகம்''
என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில்
கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதையிலிருந்து.

# வாழ்க்கைக் கலை!

பேராசிரியர் அரசு மணிமேகலை
உறுப்பினர் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்.

வாழ்க்கை ஒரு பெரிய கலை; அதனை வளமான முறையில் வாழ்ந்து முடிப்பவர்கள்; சுவடுகளைப் பதிப்பவர்கள் மிகச் சிலரே.

பெரும்பாலோர் புலம்பலிலேயே வாழ்க்கையைத் தொடங்கி, புலம்பலிலேயே முடித்துக் கொள்கிறார்கள்.

பலரின் வாழ்க்கை வரலாற்றை எழுத முற்பட்டால், பிறந்தார், இருந்தார், இறந்தார் என்கிற மூன்றே வார்த்தையோடு முற்றுப் பெற்று விடும்.

அதற்கு மேல் எழுத எதுவுமே இருக்காது. இடுகாட்டில் பலரைப் புதைத்த இடத்தில் பிறந்த தேதி இது, இறந்த தேதி இது என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

வாழ்ந்த காலம் முழுக்க, பிறந்ததிலிருந்து இறக்கும் வரை அவர்கள் செய்த உருப்படியான செயல்கள் இவை இரண்டு மட்டுமே என்பது உற்று நோக்குவோருக்கு மட்டுமே புலப்படும் உயரிய உண்மைகள்...

அதனால்தான், அவர்கள்பால் கொண்ட அனுதாபத்தின் காரணமாக, பொறுப்பே இல்லாமல் வாழ்ந்து முடித்துவிட்டார்களே என்கிற பரிதாபத்தால், போகின்ற காலத்தில் நாம் ஓர் உதவி செய்கிறோம். வைகுண்ட பதவி அடைந்தார் – சிவலோக பதவி அடைந்தார் என்று வாழ்த்தி அனுப்புகிறோம்.

மிகச் சிலரின் வாழ்க்கையில் மட்டுமே பிறந்தார், வாழ்ந்தார், வளர்ந்தார், வளப்படுத்தினார், நின்றார், நிலைத்தார் என்கிற நிலைகள் இருக்கும். அப்படிப் பட்டவர்களையே உயர்ந்தோர், சான்றோர், புகழுக்குரியோர் என்று போற்றி மகிழ்கிறோம்.

“மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்த்தனரே!”

– என்று புகழ்கிறது புறநானூறு.



நிலையாமை என்னும் குணத்தை உடைய இவ்வுலகத்தில் நிலைத்து நிற்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள், தம் புகழை நிலை நிறுத்துகிறாற் போல, அருஞ்செயல்களைச் செய்துவிட்டு, பிறகே இயற்கை அடைந்தார்கள் என்கிற இந்தப் புறநானூற்றுப் பாடல் கருத்து நினைந்து இன்புறற்குரியது.

**தீய செயல்களைச் செய்யாதிருத்தல் :-**

**''ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை''**

– என்று கூறுகிறார் இரண்டடியால் மக்கள் தம் இதயத்தின் பரப்பளந்த வான்புகழ் வள்ளுவர்.



தாய்ப்பசியைப் போக்கவே தவறுகள் செய்யக் கூடாது என்னும் போது, தன்பசி போக்க அவன் தவறு செய்யலாமா? கூடாதல்லவா? இதைச் சொல்லாமல் சொல்லுகிறார் வள்ளுவர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நான்கு பேரைக் குறிப்பிடுவார்கள் சிலர். என்னைக் கேட்டால், மாதா, பிதா, குரு = தெய்வம் என்பேன். மாதா, பிதா, குருவை அலட்சியம் செய்துவிட்டு, மண்ணுலகில் எந்தத் தெய் வத்தை வணங்கி நன்மைகள் ஈட்டிக்கொள்ளப் போகிறார்கள்? வியப்பல்லவா?

அப்படிப்பட்ட முதல் நிலையில் அன்னையை எண்ணவேண்டும் என்பதற் காகவே வள்ளுவர் கூறுகிறார்.

'யாருடைய பசியைப் போக்க வேண்டும் என்று துடிக்கிறாய்? ஓ! அன்னையின் பசியையா? ம்கூம்... அன்னையின் பசியாகவே இருந்தாலும், தீய செயல்களைச் செய்து, பசி தீர்க்க முயலாதே' என்கிறார் வள்ளுவர்.

'நீவணங்க வேண்டிய முதல் தெய்வம் உன் தாய்தான்' என்று சொல்லாமல் சொல்கிறார் வள்ளுவர்.

**பகுத்துண்ணும் பண்பு:-**

இருப்பனவற்றைப் பகுத்துண்ணும் பண்பு, எல்லோரிடமும் காணக் கூடிய ஒன்றன்று.

**''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''**

– என்று குறள் கூறுவது உண்மையிலும் உண்மையே.

இருப்பனவற்றைப் பகிர்ந்துகொள்ளத் தெரிந்தவனுக்கு, எல்லா நல்ல குணங்களும் இருக்க வாய்ப்புண்டு.

**''உண்டா லம்ம இவ்வுலகம்; இந்திரர் அமிழ்தம்**
**இயைவது ஆயினும்**
**இனிதெனத் தமியர் உண்டலும் இலரே''**

– என்னும் பாடலில் கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி என்னும் அரசர் பகிர்ந்து கொள்ளும் குணத்தார் இருப்பதால் மட்டுமா உலகம் நிலைத்திருக்கிறது என்கிறார்.

**பட்டியலில் வருகிற மற்ற பண்புகள்:-**

**''முனிவிலர்,**
**துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்**

**புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்**
**அன்ன மாட்சி அனையர் ஆகித்**
**தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''**

– என்கிறார்.

''சினம் கூடாது; சோம்பல் கூடாது; சான்றோர் அஞ்சும் செயல்களைச் செய்யக் கூடாது. புகழ் எனில், உயிரையும் தரல் வேண்டும். பழி வருமெனில், உலகே கிடைப்பதாக இருந்தாலும் செய்யக் கூடாது. அயர்வு கூடவே கூடாது. தன்னலம் பாராமல் பிறருக்காகவே பாடுபடல் வேண்டும்.'' என்கிற அன்றைய வரிகள் அன்றைக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் ஏன் என்றைக்கும் பொருந்து கின்ற பைம்பொன் வரிகள்.

**செல்வத்துப் பயனே ஈதல்:-**

எதற்காக நாம் செல்வத்தைச் சேர்க்க வேண்டும்? பிறருக்கு வாரி வாரி வழங்குவதற்காகவே, செல்வத்தைச் சேர்க்க வேண்டுமே அல்லாது, தன் மனைவி, தன் மக்கள் பயன்பட மட்டுமே அல்ல.

என்ன எளிமையான வார்த்தைப் பூக்களைக் கொண்டு வனைத்து காட்டுகிறார் நக்கீரர் புறநானூற்றில்...

**''தென்கடல் வளாகம் பொதுமை யின்றி**
**வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்**
**நடுநாள் யாமத்தும், பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**
**உண்பது நாழி, உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்புன பலவே''**

வெண் கொற்றக் குடையின் கீழமர்ந்து வையத்தை அரசாளும் வேந்தனாக இருந் தாலும் சரி, இரவும் பகலும் தூங்காமல் விலங்குகளை வேட்டையாடித் திரிகிற வேடனாக இருந்தாலும் சரி; உண்பது நாழி அரிசிச் சோறுதான்; உடுப்பவை இடுப்பில் ஒன்றும், தோளில் ஒன்றுமாக இரண்டு ஆடைகள்தான்.

செல்வத்துப் பயனே பிறருக்குத் தருவதுதான். பிறருக்குத் தராமல், நாமே அனுபவிப்போம் என்றால், அந்தச் செல்வம் நம் கையை விட்டுப் போய்விடும்...

எத்தனை உயரிய தத்துவத்தை எத்தனை எளிமையாகச் சொல்லியிருக்கிறார் பாருங்கள்?

பின்னென்ன? அரசர் என்பதாலேயே, ஆறு நாழி உண்டுவிட முடியுமா? அடிப்படைத் தேவைகள் எல்லோருக்கும் ஒன்றுதானே?

ஆனால், உலகில் பலரின் அநியாயப் பேராசைகளைப் பார்க்கத்தானே பார்க்கிறோம்! ஏராளமான சொத்துக்களை வாங்கிச் சேர்ப்பதே பிறவி எடுத்ததன் பெரும்பயன் எனப் பலர் செயல்படுவதில்லையா?

எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் ''உண்பது நாழி; உடுப்பவை இரண்டே'' என்று நயமாகச் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது பாருங்கள்!

தத்துவ நோக்கோடு, தார்மீகப் போக்கோடு மக்கள் செயல்பட வேண்டும் என்கிற கவிஞரின் எண்ணம் நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது...

**நல்லதும் அல்லதும்:-**

நரிவெரூஉத் தலையார் ஒருபடி மேலே சென்று, ஓர் உயர்ந்த உண்மையைச் சொல்கிறார்.

**''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்**
**எல்லோரும் உவப்பது; அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே''**

எல்லாருக்குமே அன்ன சத்திரம் ஆயிரம் வைக்க முடியாது; ஆலயம் பதினாயிரம் நாட்ட முடியாது; ஏழைகட்கெல்லாம் எழுத்தறிவிக்க முடியாது.

ஆனால், ஒன்றே ஒன்று செய்ய முடியும் இல்லையா?

என்ன அது? அன்னதானம், ஆலயப் பணி, எழுத்தறிவித்தல் இவை போன்ற நல்லவை செய்ய முடியாமல் போகலாம்!

ஒன்றைச் செய்ய முடியுமே! ஆமாம்! நல்லது செய்ய முடியாவிட்டாலும், கெட்டது செய்யாமலாவது இருக்கலாம் அல்லவா?

இதில் மறைமுகமாக, பல கருத்துக்களைச் சொல்லிச் செல்கிறார் கவிஞர்.

ஆலயங்கள் சென்று ஆண்டவனை வழிபட்டு நின்றால், மட்டும் நல்ல கதிக்குப் போய் விட முடியுமா? முடியவே முடியாது இல்லையா?

நல்லது செய்தால்தான் நற்கதிக்குப் போகலாம். சரி... நல்லது செய்ய முடியாவிட்டாலும், கெட்டது செய்யாமல் இருந்தாலும் கூடப் போதுமே! ''நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே'' என்கிற நயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏழையானாலும் சரி, எளியவரானாலும் சரி; எல்லோருக்கும் பொருந்துகின்ற ஏற்ற மிகு நல்லுரை இது எனலாம்.

**உலவும் நிலவு உரைத்திடும் பொருள்:-**

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் ஓங்கு புகழ்ப் புலவர், உலவும் நிலவைக் காட்டி ஓர் உண்மையை உரைக்கின்றார்.

தாமரை மலரின் இதழ்கள் நூற்றுக் கணக்கில் இருக்கும். ஒரே மாதிரி இருக்கும். அதே போல ஒரு குடிப் பிறந்து, ஒன்றாய் வாழ்கின்ற பலர் குறித்து ஆராய்ந்தால், அவர்களுள் சிலரே புகழுடன் வாழ்வது புலனாகும். பலரோ தாமரையின் இலையைப் போல, எந்தச் சிறப்புமின்றி, மாண்டவர்களாக இருப்பார்கள்.

நிலவு ஓர் உண்மையைச் சொல்லி நிற்கிறது. செல்வம் தேயும்; பின்னர் வளரும்; இல்லாமலேயே மாயும்; பின்னர் பிறக்கும் என்பதைக் கல்லாதோருக்குக் காட்டி நிற்கிறது.

***''வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்***
***வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி***
***அருள வல்லை ஆகுமதி!''***

அருஞ் செயல் செய்ய வல்லவர் ஆயினும், வல்லமை அற்றோர் ஆயினும், பசி என்று பரிதவித்து வந்தவருக்கு, இரக்கம் காட்டுங்கள்; பரிவு காட்டுங்கள் என்கிறார்.

இவர் பாடலைப் படித்தபின் வானிலே நிலவு கண்டால், கவிஞன் சொன்ன

> விடா முயற்சி இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்; தூற்றினோரே துதிபாடுவர்; ஏளனம் பேசியோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்!
>
> - அறிஞர் அண்ணா

வண்ணக் கருத்து நினைவுக்கு வராமல் போய்விடுமா? இல்லை... போகத்தான் முடியுமா?

வாழ்க்கையிலே இந்தச் செல்வம்தான் பெரும் பங்கு வகிக்கிறது. ஒருவரைச் செல்வமுடையவர் என்று போற்றுதலும், மற்றும் ஒருவரை மாப்பொருள் இழந்த நிலையில் தூற்றுதலும் அன்றாடம் உலகில் அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிகளே!

வளர்பிறை வளர்ந்து முழுநிலா ஆதலும், முழுநிலாதேய்ந்து இருளில் மூழ்கலும் வானின் நியதிகள் மட்டும் அல்ல... வாழ்க்கை நியதிகளும்தான். இதைப் புரிந்துகொண்டோம் என்றால் உள்ளம் பண்பட்டவர்களாய், உயர்ந்தவர்களாய் நாம் மாறிவிடுவோம்.

**கருத்துக் கருவூலமாம் கணியன் பூங்குன்றனார் கருத்து:-**

சிலபல கருத்துக்கள் அந்த நூற்றாண்டுக்கு மட்டுமே பொருந்தும்.

ஒரு சில கொள்கைகளே எந்த நூற்றாண்டுக்கும் பொருந்தும். அந்தக் கணக்கில் பார்த்தால், சென்ற நூற்றாண்டு, இந்த நூற்றாண்டு, எதிர்வரும் நூற்றாண்டு என்று எல்லா ஆண்டினுக்கும் பொருந்தும் கருத்துக் கருவூலம் கணியன் பூங்குன்றனாரின் பாடல் என்பதை யாரும் மறக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

பண்டைத் தமிழரின் வாழ்க்கைக் கோட்பாடுகள் எவையென்று கேட்டால், இந்த ஒரே பாடலைச் சான்று காட்டினாலே போதும்...

அந்த அளவுக்கு முழுமையான வாழ்வியல் தத்துவம் அந்தப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு என்பதை இந்த நூற்றாண்டின் இனிய தத்துவம் என்பதைப் போல நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எண்ணிப் பாருங்கள்...

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று ஒரு தமிழ்ப் புலவர் தொடங்குகிறார் என்றால், அது உலக ஒருமைப்பாட்டுக்குத் தரப்படுகின்ற உரத்த குரல் பிரகடனம் அல்லவா?

''எல்லாமே என் ஊர்தான்; எல்லாருமே என் உறவினர்தான்'' என்று சொல்கிறார் என்றால், எப்படிப்பட்ட பண்பான உள்ளம் - பக்குவப்பட்ட உள்ளம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் கூட - சாதிக்கொரு சங்கம் வைத்து 'சங்க காலம்' என்று புகழ் பெறுகிற இந்தக்காலகட்டத்தில்கூட மக்களால் இப்படித் தீர்மானமாக, திடமாகச் சொல்ல முடியுமா என்றால், சொல்ல முடியாது என்பதுதான் பதிலாக இருக்கும்.

சரி... முழுப் பாடலையும் பார்ப்போம்.

**''யாதும் ஊரே; யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;**
**சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்**
**இன்னாது என்றலும் இலமே; மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ எனாது**
**கல்பொருது இரங்கும் மல்லல்பேர் யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியில் தெளிந்தனம் ஆதலின், மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!''**

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்கிறார் பிறரால் நமக்குத் துன்பமே வருகிறது என்று நினைப்பதுதான் மனித மனத்தின் இயல்பு.

ஓரத்திலே இருக்கும் ஆட்டுக்கல்லில் காலை இடித்துக்கொண்டு ஆவென்று அலறுவோம். 'என்ன?' என்று யாரேனும் கேட்டால், ''ஆட்டுக்கல் என் காலில் இடித்துவிட்டது'' எனபோமேதவிர, ''நான்போய்ஆட்டுக்கல்லில் இடித்துக் கொண்டேன்'' என்று சொல்ல மாட்டோம். இதுதான் மனித மன இயல்பு.

ஆனால், கணியன் பூங்குன்றனார் அழகாக எடுத்துரைக்கிறார்.

**''தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும், தணிதலும் அவற்றோ ரன்ன...''**

அதுமட்டுமா? மனிதன் பிறந்த நாளிலேயே மரணம் என்பதும் விதிக்கப் பட்ட ஒன்று மரணம்; ஒன்றும் புதுமை யானதில்லை.

**நாம் எப்படி வாழ்க்கையை வாழ வேண்டும்?**

மரணம் என்கின்ற ஒன்று நிச்சயம் என்று தெரிந்துவிட்டது. எல்லோருக்கும் உண்டு அந்த மரணம் என்பதும் தெரிந்துவிட்ட ஒன்று. அதனால், வாழ்தலை இனிமையானது என்று எண்ணி அதிகமாய் மகிழவும் மாட்டார்களாம்; ஏதோ வெறுப்பு வந்துற்றால், 'ச்சே, இந்த வாழ்க்கையே பெருந்துன்பம்' என்று மனங் குலைந்து போவதுமில்லையாம்!

என்ன பக்குவப்பட்ட மனம் பாருங்கள்... இன்பத்தில் இறுமாந்து நிற்பதும், துன்பத்தில் அதிகமாய் துவண்டுபோவதும்தான் வாழ்க்கைப் போக்கை நிலை குலையச் செய்கின்றன. அந்த இரண்டிலுமே நிதானம் கடைப் பிடிக்கப்படுகிறது என்னும்போது, பதற்றமும் பரபரப்பும், வருத்தமும் வாட்டமும் அதிகம் வர வாய்ப்பில்லை அல்லவா? என்ன உயரிய வழிகாட்டல்?

நீர் வழிச் செல்லும் ஓடம் போல, ஊழ் வழியே மனிதர் செல்வர் என்பதால், பெரியோரை வியக்கவும் மாட்டார்களாம்; சிறியோரை இகழவும் மாட்டார்களாம்.

சலனமில்லாத மனத்தோடு, விளாம் பழமும் ஓடும் போல, வாழ்க்கையை அனுபவிக்கும் போக்கு இது.

இதனைக் கற்றுக்கொண்டால் வாழ்க்கையில் துன்பம் என்றுமே வாராது.

பண்டைத் தமிழரின் வாழ்க்கைக் கோட்பாடு நம்மை வியக்கவைக்கின்றது; கைகுவிக்க வைக்கின்றது; பின்பற்ற வேண்டும் என்று நினைக்க வைக்கின்றது.

■

நமதரும் தமிழ்நாட்டிற்கு, அந்நாளில் விரும்பிவந்த வெளிநாட்டினர் பலராவர். அவர்களுள் மிகச் சிலரே தமிழ் மொழியைக்கற்றுக் கொள்ளவும், தமிழினை வளர்க்கவும், தமிழில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளவும் பேரவாக்கொண்டவர்களாக இருந்தார்கள்.

அவ்வாறு, வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து தமிழ்த்தொண்டு புரிந்தவர்களில் முதலாமவர். வீரமாமுனிவரேயாவார்.

இத்தாலியில் 23.11.1680ல் பிறந்த பேரறிஞரான இவர் ஒன்பது மொழிகளிலே தேர்ச்சி பெற்றிருந்தார். பரமார்த்தகுருவின் கதை, தேம்பாவணி ஆகியவை, இவரால் எழுதப்பட்டவைகளே!

சென்னையில் சிலை

வீரமாமுனிவர், திருக்குறளின் மேல் மிகுந்த ஈடுபாடுகொண்டிருந்தார்; குறளை இலத்தீனிலும் மொழிபெயர்த்தார்.

தமிழ் எழுத்துக்களில், அரும்பாடுபட்டு சில சீர்திருத்தங்களையும் செய்த இவர், மேனாட்டு முறையின் அடியொற்றிச் 'சதுரகராதி'யையும் தொகுத்தளித்துப் பெருமைபெற்றார்.

*1968* ஆம் ஆண்டில், சென்னை மாநகரில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது, கடற்கரையோரத்தில் வைக்கப்பட்ட கவின்மிகு திருவுருவச் சிலைகளில் வீரமாமுனிவர் சிலையும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.

**இசையின் வகை**

இசை ஏழு ஆகும். அவை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை. இவைகளில் இடத்தால் குரல், நாவினால் துத்தம், அண்ணத்தால் கைக்கிளை, சிரத்தால் உழை, நெற்றியால் இளி, நெஞ்சால் விளரி, மூக்கால் தாரம் எனத் தனித்தனியே பிறக்கும். இவையே ஏழு சுரங்கள் எனவும், வீணையில் ஏழு நரம்பெனவும் குறிப்பிடப்படும்.



**வீரமாமுனிவர்**

இவற்றில் ஓசை யுவமை - மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை;

சுவை உவமை -பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங் கனி;

வாசனையுவமை மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை;

அக்கரம் ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஔஉ;

மாத்திரை நான்கு குரல், நான்கு துத்தம், இரண்டு கைக்கிளை, மூன்று உழை, நான்கு இளி, மூன்று விளரி, இரண்டு தாரம்.

இவற்றால் ஏழு பாலை பிறக்கும்; அவை யாவன: குரலே குயிலாகுமானால் செம்பாலை, துத்தமே குரலாயின் படுமலைப் பாலை, கைக்கிளையே குரலாயின் செவ்வழிப் பாலை, உழையே குரலாயின் அரும்பாலை, இளியே குரலாயின் கொடிப்பாலை, விளரியே குரலாயின் விளரிப் பாலை, தாரமே குரலாயின் மேற்செம் பாலை.

இவற்றுள், செம்பாலைக்குக் கொடிப்பாலை வலிது; கொடிப்பாலைக்கு விளரிப் பாலையும், மேற் செம்பாலையும் வலிது; அன்றியும் தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும் விளரியுள் கைக்கிளையும் பிறப்பது தகுதி.

இசையின் வகை - பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, பட மஞ்சரி, தேசி, இல்லிதை, தோடி, வசந்தம், இராக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளரி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம் என 32 வகை ஆகும்.

– தமது 'சதுரகராதியில் இவ்வாறெல்லாம் நம் தமிழிசைபற்றிப் பலவிதமாக ஆய்வு செய்திருக்கிறார் வீரமா முனிவர்.

**– கோ. பாஸ்கரன்**

சுந்தரராஜனுக்கு ஒரு மாதம் லீவாம். முதல் ஒரு வாரம் கிராமத்தில் என்னுடன் வந்து தங்கப் போவதாக எழுதியிருந்தான். ஸ்டேஷனுக்கு வண்டி போய் அழைத்து வந்தது. விடியற் காலை, கொல்லையில் இரண்டு காட்டாமணக்கு குச்சி களை ஒடித்துப் பல்லில் கடித்து சுவைத்துக் கொண்டே ஆற்றங் கரைக்குக் கிளம்பினோம்.

''அப்பா அம்மா யாரும் இல்லையா?'' என்று வழியில் கேட்டான் அவன்.

''ஊரில் இல்லை.''

''எங்கே, அண்ணாவோ இந்தத் தடவை!''

''இல்லை. அக்காள் வீட்டுக்கு.''

''எப்போது போனார் கள்?''

''இரண்டு வாரம் ஆச்சு.''

''நீங்களெல்லாம் ரொம் பக் கொடுத்துவைத்தவர்கள் அப்பா.''

''என்ன?''


''இத்தனை வயதுக்கு மேலே அப்பாவும் அம்மாவும் உயிரோடே இருந்து, அவர் களுக்கு நீங்கள் செய்து போடுகிறது என்றால் அது அதிருஷ்டந்தானே?''

''உண்மைதான், உங்கள் அப்பாவும் நீ ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறதைக் கண்டுவிட்டுத்தானே போனார்.''

''ஆனால் உங்கள் அப்பா சேதி வேறு.''

''என்ன?''

''மூன்று பிள்ளை, மூன்று பெண், ஆளுக்கு இரண்டு மாசமாய் அவர் முகாம் போடலாம். இடம் மாறினா லேயே மனசுக்கு ஒரு சந் தோஷம், சலிப்பு இருக்காது. சிணுங்கி இராது, பார்.''



... எங்கள் அப்பா கோபத்தை அடக்கினவர். அடிக்கடி கோபம் வராது. வந்தால் சிரமம்...

''சலிப்பு, சிணுக்கல் வந்தாலும் இடம் மாற்றிக் கொள்ள வழி இருக்கும். வருகிறாயா?''

''ஆமாம். ஆனால் உங்கள் அப்பாவுக்குச் சலிப்பு சிணுக் கல் வர நியாயம் இல்லை. சின்ன வயசிலிருந்து தியானம் பூஜை என்று மனசை நல்ல வழியில் ஒழுங்குப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார். கோபம், தாபம் எல்லாம் அடக்கினவர். எங்கள் அப்பா மாதிரி இல்லையே, எங்கள் அப்பாவுக்குக் கடைசி மூச்சு வரையில் கோபம் போக வில்லை. கோபித்துக் கொண் டாலும் என்னை விட்டுப் போகிறதுக்கு வழி இல்லை.'' சுந்தராஜன் ஒரே பிள்ளை.

''சிரமமாகத்தான் இருந் திருக்கும்'' என்றேன்.

''யாருக்கு?''

''அவர், நீ - இரண்டு பேருக்குந்தான்.''

''பழகிப்போச்சு, ஒருநாள் இரண்டு நாள் அல்லவே நாற்பது வருஷமாக விவரம் தெரிந்த நாளாக அவர் கோபத்தை அநுபவித்துக் கொண்டே இருந்ததனால்நாளாக நாளாக மனசிலே உரைக்கா மலே போய் விட்டது.''

''எனக்குப் பழகிப் போக வில்லை. அதுதான்வித்தியாசம்.''

''அப்படி என்றால்?''

''எங்கள் அப்பா கோபத்தை அடக்கினவர். அடிக்கடி கோபம் வராது. வந்தால் சிரமம்.''

''உங்கள் அப்பாவுக்குத் தான் கோபமே வராதென்று தான் நீ சொல்லியிருக் கிறாயே?''

''வெளியிலே' என்று ஒரு திருத்தம் சேர்த்துக்கொள்ளேன் இப்போது.''

## இல்லை சந்நியாசி!

''இப்போது அதற்கு அவசியம் வந்திருக்கிறதா? வயசான குற்றமாக்கும்?''

''ஆமாம், வயசு அறுபத் தெட்டுஆகிவிட்டது, அவருக்கு. ஆனால் இப்பொழுதென்று இல்லை. எப்போதும் அப்படித் தான். வெளியிலே யாரும், அவர் கோபித்துக் கொள்வாரா, கோபம் என்று ஒன்று தெரியுமா என்றுதான் நினைப்பார்கள். வீட்டில் இருக்கிறவர்களுக்குத் தான் அவர் மனசு எப்படிக் கோணுகிறது என்று தெரியும். சின்ன சமாச்சாரத்துக்கெல் லாம் கோபம் வந்துவிடும். குழம்பிலே கொஞ்சம் புளி தூக்கலாக இருந்துவிட்டதா னால் கண்ணிலே விரலைக் கொடுத்துத்தான் ஆட்டுவார்.''

''எல்லாருக்கும் இருக் கிறதுதான். ஆனால் உங்கள் அப்பாவுக்கும் இந்த மாதிரி என்று நீ சொன்னதில்லை, இது வரைக்கும்.''

''சின்ன வயசிலே ஒன்று நடந்தது. அப்பாவும் நானும் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறோம். எனக்குப் பதினாறு வயசு இருக்கும். அப்பா பச்சடிக்கு உப்பு ஜாஸ்தி என்று இக்குபிக்கென்றுகாய்ச்சுகிறார். அம்மாவுக்குத்தான் தொண் டையை அடைத்து அடைத்து வருகிறது. இவ்வளவு சின்ன விஷயத்துக்கு இவ்வளவு பேச்சா என்று எனக்கும் தாங்கவில்லை. ஆனால் பேச முடியுமா? அப்பா எழுந்து போகிறவரைக்கும் பேசாமல் இருந்தேன். எழுந்து கை யலம்பக் கொல்லைப்பக்கம் போனார். தொண்டையில் துக்கம் அடைக்க, 'அம்மா இனிமேல் இந்த அப்பாவோடு உட்கார்ந்து சாப்பிடவே



**– தி. ஜானகிராமன்**

போறதில்லை' என்று குமுறி னேன். அம்மா சொன்னது என்னதெரியுமா?''

''ம்...''

''சீச்சீ நாயே! வாயை அலம்பு, நாயே! அப்பாவோடு சாப்பிடமாட்டேன் என்கிற காலிக்கு இங்கே என்ன வேலை? ஓடு வெளியிலே'' என்று சீறினாள் பார், அப்படியே வெதறிப்போயிற்று எனக்கு.''

''பழங்காலத்துப் பெண் தெய்வம்.''


''அப்பாவிடம் சொல் லட்டுமா என்றாள். சொல் லேன் என்றேன். 'சொன்னால் உன்முகரக்கட்டையிலே விழிக் கக்கூட மாட்டாரடா முகரக் கட்டை!'' என்று மூன்றாம் மனிதர் காதிலே படாமல் பாட்டுப் பாடினாள். அப்பா கையலம்பிவிட்டு வந்தார். 'என்ன!' என்றார். 'மோர் புளிக் கிறதாம் துரைக்கு! முகரக் கட்டைக்கு' என்று அம்மா காற்றாடியைத் திருப்பி விட்டாள். ஏதுக்குச் சொல்ல வந்தேன் என்றால், அப்பா சின்னதுக்கெல்லாம் இப்படித் தலைசுற்றி ஆடுவார். வெளி யிலே போகிறபோது அவர் முகத்தைப் பார்த்தால் சாந்தமே ரண்டு கால், ரண்டு கையோட நடந்து போகிற மாதிரிதான் இருக்கும்.!''

சுந்தரராஜன் புன்சிரிப் புடன் 'ம்' போட்டுக்கொண்டு வந்தான். எனக்கு, இறக்கு வதற்கு ஒரு மாற்றுத்தலை அகப்பட்டு விட்டாற்போல் இருந்தது அவன் வந்தது.

''என் பிள்ளைகளை அடித்துக் கண்டித்துக்கொண்டு வரவில்லையென்று அப்பாவுக்கு ரொம்பக் கோபம் என் பேரிலே. சின்னது, சும்மாவா இருக்கும்! கை சும்மா இருக்குமா, அவர்களுக்கு? பெரிய பயல் இருக்கிறானே!''

''மணிப்பயலா?''

''ஆமாம், அவன் ஏதாவது சத்தம் போட்டுக்கொண்டே தான் இருப்பான். அவனை விரட்டி விரட்டிக்கொண்டு ஓடுவார். கையிலே அகப்படவில்லையோ, அவருக்கு



**... உனக்கும் குறும்பு போகவில்லை. அப்பா! அப்படியே நடிக்கிறாயே பதினைந்து இருபதுநாள் முன்னாலே என்ன ஆச்சு தெரியுமா?...**

ஆத்திரம் பொங்கிக்கொண்டு வரும். கடைசியிலே பிடித்து நாலு வைக்கவும் வைப்பார். அதோடு நின்றால் தேவலையே! இரண்டு மணி நேரம் வாயாலே பொரிந்து தள்ளுவார். அந்தப் பயலை என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ? மகா நெஞ்சு உரப்பில்லை அவனுக்கு? அரை நிமிஷம் சும்மா இருக்கிறானா? என்ன ஓட்டம்? என்ன கூச்சல்? புஸ்தகத்தை விரலாலே தொடமாட்டேன் என்கிறான். பிள்ளையாண்டானா வாயைத் திறக்க மாட்டேன் என்கிறான், பிள்ளையை அப்படிக் கொண்டுவருகிறானாம்! எலே, இங்கே வாடா எலே... காலமெ எழுந்திருந்தவுடனே வாசிடா என்றேனா இல்லையா? என்பார். 'அதுதான் வாசித்தேனே, தாத்தா?' என்பான் அவன். 'என்னடா வாசித்தாய்? இரண்டு நிமிஷம் வாசித்தால் போதுமாடா? - சும்மா சும்மா என்னத்தை வாசிக்கறதாம்?' - 'பிரபவ, விபவ பாடம் பண்ணச் சொன்னேனா, இல்லையா? சொன்னேனா இல்லையாடா?' - 'சொன்னாய்' - 'பண்ணினாயா?' - 'பண்ணினேன்' - 'சொல்லு பார்ப்போம்!' - 'இருபதுதான் வரும் - ' ஏன் மீதி?' - 'அறுபது இருக்கிறதே!' -'பின்னே முப்பதாஇருக்கும்?'-'உக்கும்' - ''என்ன உக்குமா? உக்குமா போடுகிறாய்?' துடையைப் பிடித்துக் கிள்ளுவார் அவனை. ஓ என்று ஒப்பாரி வைப்பான் அவன். 'மூடு வாயை! மூச்சுப் பரிந்தாயோ கொலை விழுந்து விடும்' என்பார்.

முன்னாலெல்லாம் மூச்சுப் பரியாமல்தான் இருந்தான் அவன், வரவரத் துளிர்விட்டுப் போய்விட்டது அவனுக்கு. அடிக்க அடிக்க வாயை 'ஆ' என்று நன்றாகப் பிளந்து கொண்டு அழுவான், அழுவான், அப்படி அழுவான். ஒன்றும் பலிக்கவில்லையென்றால் இவர் என்ன செய்வார் தெரியுமா? 'அப்பா, இனிமேல் அடிக்கவில்லையடா, அடிக்கவில்லையடா, அடிக்கவில்லையடா, எனத்தன் கன்னத்திலே பளீர் பளீரென்று தானே போட்டுக்கொள்வார். 'உன்னை விழுந்து கும்பிடுகிறேனடா' என்று கை இரண்டையும் கூப்பிக் கொண்டு நிற்பார். இதைப் பார்த்ததும் அவன் இன்னும் வீலென்று கத்துவான். கடைசியிலே அம்மா வந்து, 'விட்டுத் தொலையுங்களேன் அதை. அதுதான் அடங்காப்பிடாரி, அதோடு என்னத்துக்கு மல்லாட்டம்' என்பாள். 'விட்டுத் தொலைக்காமல் என்ன பண்ணப் போகிறேன்? எக்கேடும் கெட்டுப் போகட்டும், விட்டுத் தொலைக்காமல் என்ன? இதெல்லாம் விட்டுத் தொலைத்துவிட்டு, காசாயத்தை கட்டிக் கொண்டு போகலாமென்றுதான் பார்க்கிறேன். அதற்கு இன்னும் படைத்தவன் மனசு வைக்கவில்லை. தொலைக்காமல் என்ன?' என்று சொல்லி விர்ரென்று வாசலைப் பார்க்கப் போய் விடுவார்.''

''உனக்கும் குறும்பு போகவில்லை. அப்பா! அப்படியே நடிக்கிறாயே பதினைந்து இருபதுநாள் முன்னாலே என்ன ஆச்சு தெரியுமா?''

''ம்''

''காலையில் பொழுது புலரஇருக்கிறது, எனக்கு நல்ல தூக்கம். ராத்திரி ஒரு மணிக்குத் தான் படுத்தேன். விடிய விடிய அப்பா குரல் கேட்டது. கூடத்திலே உட்கார்ந்து கொண்டு மணிப்பயலைக் காய்ச்சிக் கொண்டிருக்கிறார். செஷன்ஸிலே குறுக்கு விசாரணைபோல நடக்கிறது. விஷயம் இதுதான்; தங்கை ஊரிலிருந்து வந்து ஒரு மாசம் இருந்தாள். இந்தப் பயல் வாயாடியா? அவள் ஏதோ சொல்ல இவன் தத்துப் பித்தென்று ஏதோ சொல்லியிருக்கிறான். அத்தைக்கும் பயலுக்கும் வாய் தடித்துப் போச்சு.

இந்தப்பயலுக்கு எட்டு வயசு தான். ஆனால் வாய்க்கு இருபது வயசு.

''குழந்தைகளை வைத்துக் கொண்டு பெரியவர்கள் ஊர் வம்பு அளந்தால் அவை கற்றுக் கொள்ளாமலா இருக்கும்? நீ இனிமேல் எங்கள் வீட்டுக்கு வரவேண்டாம் என்று உள்ளே போய்க் கதவைச் சாத்திவிட்டாளாம். தங்கை தடாலென்று கதவைத் திறந்துவிட்டு, 'அப்படித்தாண்டா வருவேன். எங்க அண்ணா வீட்டுக்கு நான் வருவேன். நீ யார் கேட்க?' என்று உள்ளே போனாளாம். அந்தப்பயலுக்கு வெறி, ஒரு புத்தகத்தைத் தூக்கி தங்கை தலைமேல் எறிந்தானாம். அப்போது நானும் இல்லை; அப்பாவும் இல்லை; முதல் நாள்சாயங்காலம் நடந்ததற்குக் காலையில் விசாரணை நடக்கிறது. காலையில் ஆறு மணிக்கு, 'எத்தனை நாழிகை யாடா தூங்குகிறாய்?' என்று ஆரம்பித்து முதல்நாள் கேசை எடுத்துக் கொண்டார், அப்பா. அரை மணியாகக் கேள்வி மேலே கேள்வி. நான் படுத்துக் கொண்டே கேட்டேன். எட்டு வயசுப் பிள்ளை பதில் சொல்லுகிற கேள்வியாகவே இல்லை ஒன்றும். எழுந்து பாயைச் சுருட்டிக் கட்டில் மேலே போட்டுவிட்டுக் கூடத்துக்கு வந்தேன். இந்தப் பயல் பேதிக்குச் சாப்பிடவன் மாதிரி முகத்தைச் சிணுக்கிக் கொண்டே ஒற்றை வார்த்தையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்குத் தூக்கம் கெட்ட கோபம். ''என்னடா நாயே'' என்று அந்தப் பயலைப் பளார் பளார் என்று முதுகிலே நாலு வைத்தேன். புழுமாதிரி துடிக்கக் கிளம்பிவிட்டான் அவன்.

''அப்பாவை அடிக்க முடியவில்லை. அவனை அடித்தாயாக்கும்?'' என்று குறுக்கிட்டான் சுந்தரராஜன்.

எனக்குச் சிரிப்பு வந்தது. அவன் சொன்னது ஓரளவு உண்மை போலவும் இருக்கவே, வெட்கமாகவும் இருந்தது. பதிலுக்குச் சிரிந்தேன்.


''அப்புறம்?''

''அப்புறம் என்ன? அப்பா என்மேலே பாய்ந்தார். 'ஏண்டா, நான் அவனைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். உனக்கு என்னடா? என்று ஆரம்பித்தார். 'பின்னே என்ன? நாலு அறைவிட்டுக் கழுதையை வாயை மூடப் பண்ணுகிறதா? அவனோட தர்க்கம் பண்ணிக் கொண்டே இருந்தால் வாய் வளர்கிறது, அந்த நாய்க்கு' என்று கத்தினேன்.

'ஓகோ அப்படியா! எனக்குத் தெரியாமல் போச்சு, நீ ரொம்பப் புத்திசாலிடா. எனக்குத் தெரியாமல்தாண்டா போச்சு' 'நான் புத்திசாலி என்று சொல்லிக் கொள்ளவில்லை இப்போது, உதை கொடுத்து அடக்கவேண்டிய கழுதையோட என்ன வாதம் என்று தான் சொன்னேன்' - அவ்வளவு தான் 'சை! நீ ஒரு மனுஷன் மாதிரி! பாகம் பிரிந்ததிலிருந்தே நீ வேறெ ஆளாய்த் தான் இருக்கிறாய்' என்று சுருக்கென்று என்னவோ சொன்னார்; வெளியே போய்விட்டார். மூன்று நாள் பேசவே இல்லை. நாலாவது நாள் எல்லோரோடும் ஊருக்கும் கிளம்பிவிட்டார். வந்து ஒரு மாசம் ஆகவில்லை. ஆறுமாசம் இங்கே இருக்கிறதாகத்தான் வந்தார். காரணம் கேட்டதற்கு ஏதோ வேலை கீலை என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். நொண்டிச் சாக்கென்று அவருக்குத் தெரியும்; எனக்கும் தெரியும்.''

''மணிப்பயலை நீ அப்போது அடித்திருக்கக்கூடாது.''

''அடித்துக்கொண்டு வரவில்லை என்றுதானே அவர் புலம்புகிறார்!''



**... குழந்தைகளைப் படிக்கச் சொல்கிறது, வளர்கிறது எல்லாமே மாறியிருக்கின்றன. நம் தலைமுறை நினைக்கிற வழியே வேறே; அவர்கள் போனவழி வேறே...**


''அதுசரி, அந்தச் சமயத்திலே அடித்திருக்கக்கூடாது. அதுதான் நான் அப்போதே சொன்னேன்.''

''என்னவோ, வயசானவர்களோடு பழகுகிறது சிரமமாகத் தான் இருக்கிறது.''

''சிரமந்தான். பொறுத்துக் கொண்டுதான் போகவேணும்.''

''குழந்தைகளைப் படிக்கச் சொல்கிறது, வளர்கிறது எல்லாமே மாறியிருக்கின்றன. நம் தலைமுறை நினைக்கிற வழியே வேறே; அவர்கள் போனவழி வேறே.''

அடியாத மாடு படியாது என்கிறவர்கள் அவர்கள்.



**... கடைசியில் மூன்று வருஷம் பாரிசவாதம் வந்து சித்தமும் ஸ்வாதீனம் இல்லாமல் அவர் கிடந்ததும், அவன் முணு முணுக்காமல் அவரைத் தாங்கியதும் பெரிய கதை...**

அந்தக் கட்சியும் சில சமயம் பொருத்தமாகத்தான் தோன்றுகிறது. ரொம்பவும் செல்லம் கொடுக்கவும் வேண்டாம். தோலையும் உரிக்க வேண்டாம்.'' என்றான் சுந்தரராஜன்.

''ஏதாவது சொன்னால்' டேய், நீதாண்டா அதிகமாய்ப் பிள்ளையைப் பெற்று வளர்க்கிறாய்! நாங்கள் எல்லாம் மலட்டுக்கூட்டம் பார்!'' என்று புகைகிறார்.''

''அதெல்லாம் பிள்ளை வளர்க்கிறதைப் பற்றி வந்த கோபம் இல்லை. வயசுக் கோபம். பாகம் பண்ணியாச்சு என்று வேறே சொல்கிறாய். பிள்ளைகளெல்லாம் பெரிய மனிதர் ஆகிவிட்டார்கள். வீட்டுக்கு நாலுபேர் பார்க்க வருகிறவர்களும் பிள்ளைகளோடு சினேகிதம் தவிர, அவர்களைப் பார்க்க யாரும் வர மாட்டார்கள். வந்தால் யாராவது உறவின் முறை, இல்லாவிட்டால் கிழட்டுச் சிநேகிதம் இவர்களே வருவார்கள். சோறு ஜீரணமாகாது. பல் ஆட்டம் கண்டுசும்மாசும்மாவலிக்கும். உடம்பேதாளவில்லை. சாவியோ கையைவிட்டுப் போய் விட்டது. வேறு என்ன வேண்டும்? அசூயைப் படாமல் எப்படி இருக்க முடியும் அவர்களாலே? நாமே பொறுத்துக் கொண்டு போகவேணும்'' என்று எனக்குப் புத்திமதி சொன்னான் சுந்தரராஜன். அவன் தகப்பனாரின் கோபம் சர்க்காருக்கே தெரியும். கோட்டுக்கு உள்ள பாக்கெட்டுகளுக்கு மேல் உபரியாகத் தைக்காமல் தாசில்தார் வேலை பார்த்தவர் அவர். ஒரே பிள்ளையிடமே அவர் மென்மை காட்டியதில்லை. ரூல்தடி, விசிறிக் காம்பு, வேப்பங்குச்சி என்று பல சாமான்களை அவன் எலும்பு மேலேயே உடைத்திருக்கிறார் அவர்.

''அப்பா அடித்தாரோ, நான் ஆளாகப் பிழைத்தேனோ'' என்பான் அவன்.

கடைசியில் மூன்று வருஷம் பாரிசவாதம் வந்து சித்தமும் ஸ்வாதீனம் இல்லாமல் அவர் கிடந்ததும், அவன் முணுமுணுக்காமல் அவரைத் தாங்கியதும் பெரிய கதை.

''அப்பா போனவர், இன்னம் ஒரு கடுதாசி போடவில்லை. வாரத்துக்கு மூன்று கடுதாசி எழுதுகிறவர், ஊருக்குப் போய்விட்டுச் சொன்ன தேதிக்கு நான் வரவில்லையென்றால், ரெயிலடிக்கு வந்து வண்டி வண்டியாகப் பார்க்கிறவர், காலையிலே பஸ் நிற்கிற மதகிலே வந்து பைத்தியம் பிடித்தாற்போல, போகிற, வருகிற பஸ்ஸை எல்லாம் பார்க்கிறவர்'' என்றேன் நான்.

''இது என்னப்பா இது? ஆற்றோரத்திலே ஒரு வீடு. தோட்டம்? போன வருஷம் நான் வந்திருந்தபோது ஒன்றையும் காணோமே?''

''அதுவா? வேலைமெனக்கெட்ட வேலை.''

''என்னது?''

''சக்ரபாணி ஐயர் என்று ஒருத்தர், இந்த ஊர்தான். ஆசிரமம் கட்டிக் கொண்டு இருக்கிறாராம். வானப் பிரஸ்தமாம்.''

''என்னது!''

''ஆமாம்.''

''வானப் பிரஸ்தமா?''

''ஆமாம்!''

''பழைய காலத்து வார்த்தையாயிருக்கிறதே!''

''பழக்கமும் பழையதுதான்.''

''நான் கேள்விப்பட்டதே இல்லை. இந்த இருபதாவது நூற்றாண்டிலா?''

''ஏன், இருபதாவது நூற்றாண்டிலே கிறுக்குகளே இருக்கக்கூடாதா?''

'''உண்மை என்ன என்று தெரிந்துகொள்ளாமல் . சட்டென்று தீர்மானம் சொல்லக் கூடாது.''

''பின்னே என்ன? உனக்கு வானப்பிரஸ்தம் என்றால் என்னவென்று தெரியுமா?'' என்று கேட்டேன்.

''காட்டிலே வாழ்ந்து தவம் பண்ணுகிறது.''

''இது காடா?''

''காடென்றால் சிங்கம் புலி இருந்தால்தான் காடா? ஜன நடமாட்டம் இல்லாத இடம் காடுதான்.''

''சரி, இது காடாகவே இருக்கட்டும், பெண்பிள்ளைக்கு என்ன வேலை அங்கே?''

''யார் பெண்பிள்ளை?''

''சக்பரபாணிஐயர்சம்சாரத் தோடு தபசு பண்ணுகிறார்.''

''சம்சாரம்தானே? வேறு யாரும் இல்லையே?''

''தபசுபண்ண, கூட பெண் சாதி எதற்கு?''

''இதோ பார், சும்மா கோணல்கட்சி பேசி என்ன? நான் நன்றாகப் பார்க்காமல், தெரிந்துகொள்ளாமல் ஒன்றும் பேசத் தயாராயில்லை.''

''சரி, நாளைக்குப் போக லாம்.''

''நாளைக்கா? இப்போதே போகலாம்.''

''இப்போதா?''

''ஆமாம், மெட்ராஸி லிருந்து லீவு போட்டு எதற்காக வந்தது? இந்த மாதிரியெல் லாம் புதிது புதிதாய்ப் பார்க்கத் தான்.''

''மெட்ராஸிலே இல்லாத அதிசயமா இங்கே?''

''இட்லியோடுவடையும், சாம்பாரும் போட்டுத் தின்கிற ஜனங்களைத்தான் அங்கே பார்க்கலாம். மற்றபடி ரொம் பப் புத்திசாலிகளெல்லாம் நம்மோடு பேசமாட்டார்கள். மேற்கே ஒரு காலும் கிழக்கே ஒரு காலும் வைத்துக்கொண்டு நிதானப்படுத்திக்கொள்ளவே அவர்களுக்குப் பொழுது சரி யாகப் போய்விடுகிறது. இப்படி நாட்டுக் காற்றுமேலே படுகிறபோதுதான் உயிர் வரு கிறது. நாட்டு மண்ணிலேதான் புதிதாய் ஏதாவது முளைக் கிறது.''

''இந்த ஆள் ரொம்பப் பழசாச்சே, தெரியுமா?''

''எனக்குப் புதிது. அது போதும்.''

''அவர் கிட்டப்போகிற தென்றால் முழுகிவிட்டுப் போக வேணுமோ என்னவோ? அசுத்தமாய்ப் போகலாமோ?''

''குளிக்கிறதுக்கு, ஓடுகிற தண்ணீர் எங்கே எங்கே என்று பறக்கிறது உடம்பு

''காபி?''

''எல்லாம் சாப்பிட்டுக் கொள்ளலாம்.''

பல்லைத் தேய்த்துக் குளித் தோம்.

''அவருக்குப் பிள்ளை குட்டி உண்டா?''

''அதில் ஒன்றும் குறைவு இல்லை. நாலு பிள்ளைகள். ஒவ்வொருத்தனும், ஆயிரம் ஐநூறு சம்பளம் வாங்குகிறான். ஒரு பையன் நிலம் நீர்ச்சைப் பார்த்துக்கொண்டு இங்கே இருக்கிறான்.''


''பிள்ளைகளோடு ஏதா வது மனத்தாங்கல் இருக் குமா?''

''இல்லாவிட்டால் இப் படி ஏன் பரதேசிக் கோலம் போட வேணும்? நீ என்ன இவரைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாய்?''

''பின்னே எதைப்பற்றிப் பேசுகிறது. புதுச் செய்தியாக இருந்தால் பேசித் தானே ஆக வேணும்?''

குளித்துவிட்டுத் துணியை யும் அங்கேயே உலர்த்திக் கட்டிக்கொண்டு ஆசிரமத்தைப் பார்க்க நடந்தோம்.

''இப்போது ஏதாவது நூற்றுக்கொண்டிருப்பாரோ?'' என்று நண்பன் கேட்டான்.



''அந்த ஆசிரமம் இல்லை. இது சும்மா தபசுதான்.''

ஒரு சின்னத் தோப்பு. நல்ல நிழல்பாங்கு. வாழை, வேம்பு, முருங்கை, செம்பருத்திச் செடிகள், பவழ மல்லிகை மரங்கள், மல்லிகைப் புதர்கள், துளசி, விபூதிப் பச்சை, மாசிப் பச்சை நடை வரப்புக்குப் பொன்னாங்கண்ணி, நாலைந்து எலுமிச்சங் கன்றுகள், வெண்டை வரிசை, கீரைப்பாத்திகள், வேப்ப மரத்தில் கட்டிய ஒரு பசுவும் கன்றும், சூழ்நிலை மனத்திற்கே, குளுகுளுவென்று இருந்தது. தோட்டத்தின் நடுவில் வீடு, கீற்று வேய்ந்த வீடு, நாலு பக்கமும் விசால மான தாழ்வாரம், வீடு தோட்டம் எல்லாம் மெழுகியும் பெருக்கியும் துப்புரவாக இருந்தன.


ஐயர் புலித்தோலைப் பரப்பிக் கண்ணை மூடி நிமிர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். இரண்டு நிமிஷம் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றிருந்தோம்.

''அப்புறம் வருவோமே?'' என்றான் சுந்தரராஜன்.

ஐயர் கண் திறந்தது. திரும்பி எங்களைப் பார்த்தார்; விகற்ப சமாதிதான் போல் இருக்கிறது.

''நமஸ்காரம்'' என்றேன் நான்.

காலைக் கிணற்றங்கரையில் கழுவி வருமாறு சைகை காட்டினார். கழுவி வந்தோம். ''தாழ்வாரத்தில் உட்காருங்கள், ஒரு நிமிஷம்'' என்ற பாவனையில் சைகை காட்டவே உட்கார்ந்தோம். ஒரு சிறிய



**... ஐயர் புலித்தோலைப் பரப்பிக் கண்ணை மூடி நிமிர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். இரண்டு நிமிஷம் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றிருந்தோம்...**

அலமாரியில் புத்தகங்கள், இரண்டு மூன்று ஞான யோகிகளின் படங்கள் அங்கு வேறு ஒன்றும் இல்லை. சுற்றி முற்றிக் கண்ணால் அளந்து கொண்டு அந்த அமைதியையும் நிழலையும் தன்மையையும் பருகிக் கொண்டிருந்தோம். ஒரு நிமிஷம் ஆயிற்று.

''என்ன துரைசாமி! எங்கே இப்படி அத்தி பூத்தாற் போல? அவர்கள் யார்?''

''என்னோடு காலேஜிலே வாசித்தவர்; சென்னையிலே ஒரு மத்திய சர்க்கார் இலாகாவுக்கு உதவித் தலைவர். லீவிலே வந்திருக்கிறார்.''

''நமஸ்காரம்.''

''நமஸ்காரம்.''

''எந்த இலாகாவோ?''

சுந்தரராசன் சொன்னான்.

''ஓகோ! பெரிய வேலைதான் - என்ன துரைசாமி, அப்பா அம்மா எல்லோரும் சௌக்கியம்தானே?''

''ம், அப்பா ஊரிலே இல்லை.''

''எப்போது போனான்?''

''மூன்று வாரம் ஆயிற்று.''

''எங்கே?''

''விழுப்புரம்.''

''உடம்பு திடமாக இருக்கிறான் அல்லவா?''

''கொஞ்சம் பலக் குறைவு தான்.''

''ரொம்ப சீக்கிலே அடிபட்டுவிட்டான். பாவம்! - என்ன, அவன் இவன் என்று பேசுகிறானே என்று பார்க்கிறீர்களா? இவன் அப்பா என் க்ளாஸ்மெட், ஸார். இத்தனையுண்டு குழந்தையிலிருந்து சேர்ந்து வாசித்தோம். பரம சாது, தங்கக் கம்பி என்று சொல்லுவார்கள். நான் தங்க புஷ்பனம் என்று சொல்லுவேன். அவ்வளவு மிருதுவான சுபாவம்! இந்தக் கோபம், அதட்டல், உருட்டல் ஒன்றும் தெரியாது. பரம புண்ணிய சாலிக்குத்தான் இந்த குணங்கள் வாய்க்கும்.''

''இந்தக் குணங்கள் எல்லாம் என் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை'' என்றேன் நான்.

''நீயும் ஒன்றும் குறைவு இல்லை. அதற்கு என்ன? யாரும் லட்சியம் இல்லை என்று ஒரு போக்கு. வயசானால் அதுவும் சரியாகப் போய்விடுகிறது. ம், சாருக்குச் சொந்த ஊர் எதுவோ?''

ஊரைச் சொன்னான் சுந்தரராஜன்.

''பேஷ் பேஷ்! நம் பக்கந்தான். அதுதான் மூஞ்சியிலே எழுதியிருக்கிறதே. நிதானம், அழுத்தம், குறும்பு, புத்தி, சக்தி தெரிகிறது'' என்று தலையாட்டினார் ஐயர்.

''எங்கே இப்படி?''

''சும்மாத்தான், பல் தேய்க்க வந்தோம். என்ன தோட்டம் துரவெல்லாம் புதிதாயிருக்கிறதே என்றார் இவர். காண்பிக்கலாமென்று கூட்டி வந்தேன்.''

''ஆமாம் துரைசாமி, இப்போது நான் 'எக்ஜிபிஷன்'' மாதிரிதான் இருக்கிறேன். இந்தப் பேர் புதிதாக இருக்கிறது பார்.''

''எது?''

''எதுவா, உனக்குத் தெரியாதோ? வானப்பிரஸ்தம்.''

''அதற்கு நிஜ அர்த்தம் என்ன!''

''பழைய நாளிலே வித்தியாப்பியாசம் பண்ணிஇல்லறம் நடத்தி, உலகம் சுகம் எல்லாம் அனுபவித்துவிட்டு வயசானவுடனே கிழவியை அழைத்துக் கொண்டு காட்டிலே போய்த் தபசு பண்ணுவார்கள். அந்த மாதிரி கிளம்பி வந்துவிட்டேன் நான். அதுதான் அர்த்தம். நான் இப்போது இல்லற சந்நியாசி. கடைசியில், இல்லறம் போய்ச் சந்நியாசம்தான் நிற்கும்.''

''சந்நியாசம் அவசியந்தானா?'' என்று கேட்டான் சுந்தரராஜன்.

''வைராக்கியம் வந்துவிட்டதானால் சந்நியாசத்திலே போய்த் தானாக மனசு விழுந்துவிடுகிறது. அப்போது அது அவசியம் என்றுதான் படும்.''

''வைராக்கியம் வந்தால்தானே?''

ஆமாம், கோபித்துக் கொண்டு சில பேர்கள் சந்நியாசம் வாங்கிக்கொண்டால் என்ன ஆகும் தெரியுமோ? கோபம் தணிந்த பிறகு, ஏண்டா வந்தோமென்று அழுகை அழுகையாக வரும். இந்த மாதிரி வீட்டைவிட்டு, ஊரை விட்டுத் தனியாக ஒதுங்கி வந்தால்தான் வைராக்கியம் பழகும். மனிதனை ஆட்டி வைக்கிற பெரிய சக்தி எது ஸார்? சொல்லுங்கள் பார்ப்போம், சுந்தரராஜன்?''

''சதை''

''அப்படி என்றால்?''

''ம், காமம்.''

''கரெக்ட், ஏது ஏது! பெரிய ஆளாக இருக்கிறீர்களே! துரைசாமி, உன் சிநேகிதர் பெரிய ஆளாய் இருக்கிறாரே! அந்தக் காமத்தை வெல்ல முடியாது என்றுதான் வானப்பிரஸ்தத்திலேயும் அவளைக் கூட்டிக் கொண்டு போ, கூட வைத்துக் கொண்டு பிரம்மச்சரியம் பழகு என்று சொன்னார்கள். இல்லாவிட்டால் அங்கேயும் போய் ஏதாவது தடுமாறி விழுந்தால் இரண்டு கண்ணும் போனது போலத் தான். வைராக்கியம் பழகவே இந்த நிலை.''



**... ஆமாம், கோபித்துக் கொண்டு சில பேர்கள் சந்நியாசம் வாங்கிக்கொண்டால் என்ன ஆகும் தெரியுமோ? கோபம் தணிந்த பிறகு, ஏண்டா வந்தோமென்று அழுகை அழுகையாக வரும்...**

''இப்படி வரவேணுமென்று உங்களுக்கு ஏன் தோன்றியது?'' என்று கேட்டான் சுந்தரராஜன்.

''அதுவா? எனக்குப் பிள்ளைகளோடு சண்டை பூசல் ஒன்றும் கிடையாது ஸார். ஒரு தெய்வத்துக்கே அடுக்காத அநியாயத்தைப் பார்த்தேன். அப்போது பிறவியின் ரகசியம் புரிந்து போய்விட்டது. கிளம்பி விட்டேன்.''

''என்ன அநியாயம்?''

''சாலிப்பாட்டி சாலிப் பாட்டி என்று இங்கே ஒருத்தி இருந்தாள். உனக்குத் தெரியுமாடா துரைசாமி?''

''யார்?''

''கிட்டன் இருக்கிறான் அல்லவா? 'ஸெமி' பளிங்கு மூக்குக் கண்ணாடி?''

''ஆமாம், நாகுவுடைய அண்ணன்.''

''அவன் பாட்டி, பரம ஏழை, சின்ன வயசிலே வீணாகப் போய்விட்டாள். காலணாக்கிடையாது. இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு படாத சிரமப்பட்டாள். பக்கத்து ஊரிலே போய்ச் சமைத்துப் போடுகிறது; சமைத்துவிட்டுத் திரும்பி வருகிறது; வருகிற போதெல்லாம் இரண்டு இரண்டு செங்கல்லைக் கையிலே எடுத்து வருவாள்.''

''செங்கல்லா? எதற்கு?''

''வீடுகட்ட. அப்போது எங்கள் அம்மா எங்கள் பழைய வீட்டைப் புது வீடாக மாற்றிக் கொண்டிருந்தாள். சாலிப் பாட்டி தூரத்து உறவு. நாலு

தலைமுறைக் கணக்கிலே எங்கள் அம்மாவுக்கு அத்தை முறை. அவளுக்கு ஒரு வேகம். என் மருமாள் வீடுகட்டுகிற போது நான் மட்டும் சும்மா இருப்பேனா என்று சாமக் கிரியையெல்லாம் சேர்க்க ஆரம்பித்தாள். எங்கே கல்லு கிடந்தாலும் இரண்டு இரண்டாக எடுத்துக்கொண்டு வருவது, எங்கேயாவது வீட்டு வேலை நடந்தால் ஒரு படி அரைப் படியாகச் சிமெண்டைப் பிச்சை வாங்குகிறது. ஐயா, இப்படியே சேர்த்தாள் ஐயா, சேர்த்தாள்- ஐயா, தம்படி செலவழிக்காம குவித்துவிட்டாள். எங்கள் வீட்டிலே தச்சு வேலை நடந்தது. துண்டு விழுகிற சட்டம், பலகை குச்சி ஒன்றை விட மாட்டாள்: தூக்கிக் கொண்டு போய்விடுவாள். ரொம்ப ஆச்சரியமான பொம்மணாட்டி. கடைசியிலே கழுக்கூடு மாதிரி இருந்த அவள் வீடு, வெறும் குடிசை, அது என்ன ஆச்சு? பளபளவென்று சின்ன வீடாக, ஓட்டு வீடாக, அழகாய் வளர்ந்துவிட்டது. வயது அறுபத்தஞ்சு அப்போது அவளுக்கு. இத்தனை செய்தவளுக்கு என்ன கிடைத்தது தெரியுமா? ஆறு மாசம் அந்த வீட்டிலே அவளால் இருக்க முடியவில்லை. பிள்ளையும் நாட்டுப் பெண்ணுமாகச் சேர்ந்து அவளை உதை உதை என்று உதைத்தார்கள், சோறுபோடாமல் விரட்டி விட்டார்கள். ஊரிலே எவ்வளவோ பேர் சொல்லியும் நடக்கவில்லை.

அந்தப்பயல் கிராதகன். கடைசியிலே திண்ணையிலாவது இருக்கட்டுமடா என்று சொல்லி அவளைத் திண்ணையில் வைத்தார்கள். ஒரு வாரம் அங்கேயே இழுத்துக்கொண்டு கிடந்தது அது. அப்புறம் ஹோகயா. முதல் நாளைக்கு வந்து ''இந்தாருங்கள், பால் கோவா பண்ணியிருக்கிறேன் கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று மாமியார் வாயிலே கொண்டு திணித்தாள், நாட்டுப் பெண். இதை நான் கண்ணாலேயே பார்த்தேன். அன்றிலிருந்து அது மனசிலே வேலை செய்து கொண்டிருந்தது. ஒன்று தெரிந்து கொண்டேன். இந்த உலகத்திலே அன்பு இருக்கிறதே அன்பு, அது இறங்கு முகமாகப் போகும், பக்கவாட்டிலே போகும், மேல் நோக்கிப் போகாது.


''அப்பனுக்குப் பிள்ளை மேல் ஆசை. அந்தப் பிள்ளைக்கு அவன் பிள்ளைமேல் ஆசை. இப்படிப் போகுமே ஒழிய, பிள்ளை அப்பாவிடம் இருக்கிறது என்று சாத்தியம் இல்லை.''

''என்னஇது, ஒரேஅடியாக?''

''அதுதான் ஸார் உண்மை. அப்பாவிடம் பயந்தான் இருக்கும். கௌரவம் இருக்கும். பெண்டாட்டியிடமும் பிள்ளைகளிடமும் இருக்கிற அன்பும் ஆசையுமா இருக்கும்?''

''நீங்கள் ஏதோ புதிதாகச் சொல்ல வேணுமென்று சொல்கிறதுபோல இருக்கிறது.''

''புதிதா! மிகவும் பழசான சமாசாரம், ஐயா இது. நம் சாஸ்திரங்கள் கவிகள் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள்? அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ஏன் ஐயா பிள்ளையிடம் அன்பாக இரு; பெண்டாட்டியிடம் ஆசையாக இரு என்று சொல்லக் கூடாதோ?



**... அப்பனுக்குப் பிள்ளை மேல் ஆசை. அந்தப் பிள்ளைக்கு அவன் பிள்ளைமேல் ஆசை. இப்படிப் போகுமே ஒழிய, பிள்ளை அப்பாவிடம் இருக்கிறது என்று சாத்தியம் இல்லை...**

ஆக, இந்த அன்பு போகிற போக்கு இறங்குமுகம் இல்லையா? மேல்நோக்கிப் போகிறது இயற்கைக்கே முரண் என்று ஆகவில்லையா?

சுந்தரராஜன் என்னைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தான்.

''வயசான பிறகு காட்டுக்குப் போ என்று இதற்காகத்தான் வைத்திருக்கிறார்கள். வயசான பிறகு உன்னைக் கவனிக்க மாட்டார்கள், யாரும். மரியாதையாய் ஒதுங்கிவிடு என்று அர்த்தம்; கடமையினாலும் நன்றியினாலும் நம்மை வைத்துக் காப்பாற்றுவான் பிள்ளை. வாஸ்தவந்தான். ஆனால் தர்மசங்கடம் இல்லாமல் இராது, இரண்டு தலைமுறை சேருவதில்லை. அடிப்படையாக நான் சொல்கிற இறங்குமுகந்தான் சரி. என்ன, உங்களுக்கு என்ன தோன்றுகிறது?''

''யோசிக்கிறோம். அப்புறம்தான் தெரியும்.''

''பேஷாக யோசியுங்கள் -இந்தா என்ன, உள்ளைவிட்டு வரமாட்டேன் என்கிறாய்? இவர்கள் வந்து எத்தனை

நாழிகை ஆச்சு தெரியுமா-இல்லையோ?... உன்னைத் தானே! நானும் மூச்சுவிடாமல் பேசிக் கொண்டிருக்கிறேன்.. என்று உள்ளே பார்த்துக் கத்தினார் ஐயர்.

''இதோ!'' என்று குரல் வந்தது.

அரை நிமிஷத்தில் இரண்டு தம்ளரில் காப்பியை எடுத்து வந்தாள் ஐயர் மனைவி; பொல்லென்று வெளுத்த தலை, சற்று ஸ்தூலித்த உடல், பிறகு அவருக்கும் காபி வந்தது.

நல்ல காபி. கள்ளிச் சொட்டு காப்பி; மணக்கிற காப்பி.

''காபி இல்லாமல் என்னால் இருக்கமுடியாது ஸார். நாலு வேளை சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஆசிரமம் எடுத்துக்கொண்ட பிறகு மூன்று வேளையாகப் பண்ணிக் கொண்டிருக்கிறேன். இரண்டு, ஒன்றாகக் குறைத்து நிறுத்தி விடுவேன். இன்னும் நாலு வருஷம் கழித்து நீங்கள் வந்தால் இங்கே கொத்தமல்லிக் காபிதான் கிடைக்கும், சொல்லி விட்டேன்'' என்று எச்சரிக்கையுடன் முடித்தார் ஐயர்.

''வெற்றிலை போடுவது உண்டா?''

''பரவாயில்லை'' என்றான் சுந்தரராஜன்

''இருக்கிறது, வேணுமென்றால் வருகிறது.''

''அவருக்கு அதுதான் உயிர்'' என்றேன் நான்.

''இந்தா, உன்னைத்தான். வெற்றிலை சீவல்?''

வெற்றிலை சீவல் பெட்டியில் வந்தன. அவற்றோடு உயரமான டப்பா ஒன்றும் வந்தது.

சுந்தரராஜன் அரைத்தான். உயரமான டப்பா நிறையக் குங்குமப் பூவாக நறுக்கிய புகையிலை.

ஐயரும் வாயில் போட்டு அரைத்துப் புகையிலை ஒரு கொத்து எடுத்து உள்ளங்கையில் வைத்துப்பிடித்து வாயில் அடக்கினார். புகையிலையைக் கண்டதும் சுந்தரராஜன் முகம் பளீர் என்று மலர்ந்தது. அவனும் ஒரு பிடி எடுத்து அடக்கினான்.

''ஒண்ணாங் கிளாஸ் புகையிலையாய் இருக்கிறது.''

''சிவபுரியிலிருந்து நேராய் வருகிறது. ஸார் முன்னெல்லாம் பன்னீரும் வாசனையும் கலந்ததாகப் போட்டுக் கொண்டிருந்தேன். ஆசிரமத்துக்கு வந்த பிறகு வெறும் புகையிலையோடு நிறுத்திக் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விட வேண்டியிருக்கிறது.''

''விடமுடியுமா?''

''முயற்சி பண்ணுகிறது. முடியவில்லையென்றால் பகவான் செயல், திடீரென்று விட்டுவிட்டு, ஜபம் பண்ணுகிறபோது புகையிலையை நினைத்துக் கொண்டிருப்பதை விட ஒரு தடவை போட்டுத் துப்பிவிட்டு உட்கார்ந்தால் தண்டா இல்லை, பாருங்கள்.''

''அது சரி, அறவே விட்டு விடுகிறதுதான் முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது.''

''அதுதான் சொன்னேனே! முயன்று பார்க்கிறது. முடியவில்லை என்றால் இன்னொரு ஜன்மாவிலேதான் விட வேணும். நாம் என்ன பண்ணுகிறது? சம்ஸ்காரம் விடுகிறதா?''



ஐயரோடு வெகுநேரம் பேசினோம். ''நானே கடவுள், நானே பிரம்மம்'' என்றுதான் தியானம் செய்கிறார் அவர். ஊரில் வாழ்ந்தபோது லிங்கம் விக்கிரகம் எல்லாம் வைத்து, அபிஷேகம் பூஜை எல்லாம் தினப்படி செய்து வந்தாராம். ஞான மார்க்கத்தில் இறங்கு வதற்காகத் தீர்மானித்ததும் அவற்றையெல்லாம் மூட்டை கட்டி ஒன்றுவிட்ட தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு, ஆசிர மத்துக்கு வந்துவிட்டாராம். இப்போது அவருக்குத்தியானந் தான் தொழில்.''

விடைபெற்றுக் கொண்டு கிளம்பும்போது மணி ஒன்பது ஆகிவிட்டது.

''ஒரு வாரம் இருப்பீர்கள் அல்லவா? இன்னொருதடவை வந்துவிட்டுப் போங்கள்'' என்றார் அவர் சுந்தரராஜனைப் பார்த்து.

''கட்டாயமாக வருகி றேன்.''

வெளியே வந்து நடந் தோம்.

''ஸ்வாரஸ்யமான ஆள் தான்'' என்றான் சுந்தரராஜன். ''அவர் மார்பெல்லாம் பார்த் தாயா? வைரம் பாய்ந்திருக் கிறது; பிராணாயாம மார்பு'' என்றான். ''உள்ளூரிலே இந்த மாதிரி ஓர் அபூர்வமான ஆள் இருக்கிறபோது அவரோடு பழகாமல் நையாண்டி பண் ணிக்கொண்டு உட்கார்ந்திருக் கிறாயே!'' என்று என்னைக் கடிந்து கொண்டான்.

''சரி, நீ இனிமேல் ஊருக் குப் போகிறவரைக்கும் இங்கே தான் பழி கிடப்பாய் போல் இருக்கிறதே!''

''பின்னே என்ன? இந்த மாதிரிப் புகையிலை இங்கே யார் கொடுப்பார்கள்? நீ கொடுப்பாயா? என்ன துர்ப் பழக்கமென்று உபதேசம் பண்ணுவாய்!''

**– தி. ஜானகிராமன் எழுதிய ''அக்பர் சாஸ்திரி'' என்ற நூலிலிருந்து.**

நன்றி : ஐந்திணைப்பதிப்பகம்
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005.

# புதுக் குறளுக்குப் புதை குழி!

மதுரையில், 1901–ஆம் ஆண்டில் செந்தமிழ்ச் சங்கம் நிறுவிய பெருமையாளர் பாண்டித்துரைத் தேவர்; தமிழை யார் பிழைபட எழுதினாலும் பேசினாலும் அவருக்குப் பிடிக்காது.

அக்காலத்தில், மதுரைமா நகரில் ஸ்காட் துரை என்கிற ஆங்கிலோ–இந்திய வழக்கறிஞர் ஒருவர் இருந்தார். தமிழை அரை குறையாகப் படித்திருந்த அவர்; திருக்குறளில் எதுகை மோனையே இல்லை என்று பேசிக் கொண்டிருந்தார்; அது மட்டுமல்ல–

'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி உகர முதற்றே உலகு' – என்பது போலக் குறட்பாக்களை மனம்போல மாற்றி எழுதி 'சுகாத்தியரால் திருத்தியும் புதுக்கியும் பதிப்பிக்கப்பட்ட குறள்' எனப் பெயரிட்டு, அச்சிட்டு ஒரு ரூபாய் விலைக்கு அதை விற்கவும் ஏற்பாடு செய்துவிட்டார்.

அதைவிடக் கொடுமை – தமது புதுக்குறள் பற்றிப் பாண்டித்துரைத் தேவரிடமும் பெருமையோடு போய்ப் பேசியிருக்கிறார்.

தேவரோ, 'உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் திருத்த இவர் யார்?' என்று உள்ளுக்குள் கொந்தளித்தார். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அவ்வளவு புதுக்குறள் புத்தகத்தையும் தாமே விலைக்கு வாங்கி – ஆழக் குழிதோண்டச் செய்து அதில் போட்டு எரித்து மண் தள்ளி மூடச் செய்தேவிட்டார்!

## கர்ப்பிணிப் பெண்ணுக்குக் கால்சியம் அவசியம்

தினமும் 1500 - 2000 மில்லிகிராம் கால்சியத்தை உணவில் சேர்த்துக்கொள்ளும் கருவுற்ற தாய்மார்களுக்கு பிரசவம் எளிமையாக இருக்கும் என்றும், பிரசவக்குறைகளை இதுபோக்கும் என்றும் அமெரிக்காவிலுள்ள மருத்துவக் கழகம் ஆய்வின் மூலம் கண்டு பிடித்துள்ளது.

## குழந்தைத் தொழிலாளர்கள்

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அடிமை ஒழிப்பு நிறுவனம் ஒன்று கணக்கெடுத்துள்ளது. இதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்று கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இந்தியாவில் 7.3 கோடியிலிருந்து 11.5 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளார்கள் என்று அந்தக் குறிப்பு தெரிவிக்கிறது. 80 இலட்சம் பேர் பாகிஸ்தானிலும், , 57 இலட்சம் பேர் நேபாளத்திலும்57 இலட்சம்பேர் பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் 50 இலட்சம் குழந்தைகள் சீனாவிலும், வங்காள தேசத்தில் 28 இலட்சம் பேரும், இந்தோனேஷியாவில் 24 இலட்சம் குழந்தைகளும், தாய்லாந்தில் 11 இலட்சம் பேரும் இலங்கையில் 5 இலட்சம் பேரும் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர் என்றும் அந்தக் குறிப்புத் தெரிவிக்கிறது.

## கன்பூஷியசும் சட்டைப்பித்தானும்

சீனா என்றவுடன் அதன் நீண்ட நெடுஞ்சுவரும், உலகத் தத்துவ ஞானிகளில் ஒருவரான கன்பூஷியசும் நினைவுக்கு வருவார்கள். கன்பூஷியஸ் சட்டைப்பித்தான்களில்கூட தத்துவத்தை உணர்த்த முடியும் என்று சொன்னவர். அவருடைய காலத்தில் சீனர்கள் சுகட்டுமேனிக்கு சட்டைப்பித்தான்களை வைத்துத்தைத்து அணிவார்களாம். அதைஐந்து பித்தான்களாகக் குறைத்து மக்களை அணியச் சொன்னாராம் கன்பூஷியஸ். அதுமட்டுமல்ல, அறிவுரை சொன்னதோடு தன் சட்டையிலும் ஐந்துப் பித்தான்களை வைத்துத் தைக்கச்சொல்லி அணிந்தாராம். அதனால் எல்லோரும் அவர்போலவே அணியத் தொடங்கினாராம். அது என்ன ஐந்து என்கிறீர்களா?

உண்மை, அமைதி, பொறுமை, சகிப்புத் தன்மை, நேர்மை என்ற குணங்களை அந்த ஐந்து பித்தான்களும் நினைவுப் படுத்துகின்றனவாம். சரி, உங்கள் சட்டையில் எத்தனைப் பித்தான்கள் உள்ளன?

# தெரிந்து கொள்வோம்

## ‘டீ அருந்துவோமா?

டீ பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி,

ஒரு நாளைக்கு 4 முதல் 7 கோப்பைகள் வரை டீ (அதாவது கருப்பு டீ என அழைக்கப்படும் பால்கலக்காத டீ) அருந்தினால் மாரடைப்பு வருவதில்லை என்று டச்சு நாட்டு மருத்துவக்குழு அறிவித்துள்ளது. எனவே டீ அருந்தி ஜமாயுங்கள் ஆனால் கருப்பு டீ தான்!

## சென்னைத் துறைமுகக் கப்பலுக்கு சிங்காரவேலர் பெயர்

அண்மையில் சென்னைத் துறைமுகத்திற்குப் புதிதாக வாங்கப்பட்டுள்ள முட்டுக்கப்பலுக்கு ‘சிங்கார வேலர்’ பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சிங்காரவேலர் முட்டுக்கப்பலின் இழுவைத்திறன் 32 டன். இதன் இழுவைத்திறன் 12 நாட்கள்மைல் இதில் 1700 குதிரை சக்தி உள்ள இரண்டு ‘பொஜன’ டீசல் எஞ்சின்களும், எல்லா திசைகளிலும் இயங்கக் கூடிய ‘வாய்த் சினீடர் புரொப்பலர்கள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் விலை 14 கோடி ரூபாய் ஆகும். இந்தக் கப்பல் பம்பாயிலுள்ள பாரதி கப்பல்கட்டும் தனியார் நிறுவனத்தால் கட்டப்பட்டது.

# எங்கள் ஊர் பிரச்சினை

## பிரச்சினை :

தஞ்சாவூர் நகராட்சி 32வது வட்டம் பூக்கார புது வஸ்தா தெரு அருகில் உள்ள கல்லணைக் கால்வாயில் அமைந்துள்ள 20 கண் பாலத்திலிருந்து பூக்காரத் தெருவை இணைக்கும் சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இதில் நகராட்சி சாக்கடை மண்ணைப்போட்டு நடக்கமுடியாத மிக மோசமான நிலையில் இருக்கிறது. இச்சாலை தென்வெட்டுக் காரத்தெரு, கோரிக்குளம், கோரிக்குளம் புதுத்தெரு அன்புநகர், பூக்காரத்தெரு ஆகிய தெருவாசிகள் போக்குவரத்திற்குப் பயன்படக்கூடிய சாலை. இச்சாலை நெடுநாட்களாகக் கப்பி போடவில்லை. மேலும் சாக்கடை மண்ணைப்போட்டு நடந்து செல்வதற்குக்கூட முடியாத மிக மோசமான நிலையில் இருக்கிறது. இதனால் பல தொத்து வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மேற்கண்ட தெருவாசிகளின் நன்மையைக்கருதி ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**சி. சாமி அன்பன்,**
32வது வட்ட தெருவாசிகள்,
பூக்கார புதுவஸ்தா தெரு, தஞ்சாவூர்.

## தீர்வு :

தஞ்சாவூர் நகராட்சியில் 32ம் வார்டில் அமைந்துள்ள பூக்கார புதுவஸ்தா தெரு அருகில் உள்ள கல்லணைக் கால்வாயில் அமைந்துள்ள 20 கண் பாலத்திலிருந்து பூக்காரத்தெருவை இணைக்கும் சாலை ஏற்கனவே தார் போடப்பட்டு தற்போது பழுதடைந்துள்ளது. அந்தச்சாலையை மீண்டும் புதுப்பித்துத் தார்தளம் அமைக்கும் பணிக்கு ரூ. 1,25,000 க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கழிவுநீர், கால்வாயிலிருந்து எடுக்கப்பட்ட மண், குப்பைகள் நகராட்சி துப்புரவுப்பணியாளர்கள் மூலம் வெளியே எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தி நடந்து செல்வதற்கு இடையூறு இல்லாமல் செய்யப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.

## பிரச்சினை :

எங்கள் ஊரில் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. 1000 வீடுகள் கொண்ட எங்கள் ஊரில் ஒரே ஒரு அடிபம்புதான் உள்ளது. மேலும் அத்தண்ணீரை உபயோகிக்க முடியாத அளவிற்கு அதைச்சுற்றி சாக்கடை தேங்கி இருப்பதால் அதை உபயோகிக்கும் எங்கள் ஊர் மக்களுக்குப்பலவிதமான நோய்கள் தாக்குகின்றன. இதை, சம்பந்தப்பட்ட துறைக்கு நேரடியாகவும், கடிதம்மூலமும் தெரிவித்தும் அவர்கள் எந்தவித நடிவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இந்தப்பிரச்சினை தொடர்பான துறையின் உயர் அலுவலர்களிடமிருந்து பதிலைப் பெற்றுப்பலன் அளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
**ஊர் பொதுமக்கள்**, வெள்ளக்கோயில் வார்டு,3,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி - 627003.

## தீர்வு

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங் கோட்டை மண்டலத்திலுள்ள வண்ணாரப் பேட்டை வெள்ளக்கோயில் வார்டு 3 பொது மக்களின் கடிதத்தின் நகலில் தெரிவித்துள்ளபடி 17.09.96ல் வார்டு 3 மற்றும் 2ல் உள்ள பகுதிகள் சுத்தம் செய்து கொடுக்கப்பட்டது.

மேலும் வெள்ளக்கோயில் பகுதி தற்சமயம் மாநகராட்சியுடன் இணைந்த பகுதியாகும். மேற்படி பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இதுவரை கிடையாது. மேலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 6.63 கோடி குடி நீர் அபிவிருத்தித் திட்டத்தில் வழிவகை செய்யப பட்டுள்ளதால் மேற்படி பணி நிறைவேறும் பொழுது குடிநீர் பற்றாக்குறை தீர்ந்துவிடும். தற்போது மேற்படி பகுதிகளில் வாரம் ஒருமுறை டில்லர் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பகுதியில் இரண்டு அடிபம்பு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏனைய மூன்று அடி பம்புகள் பயன்பாட்டுக்குத் தகுதியற்றதாக ஆகிவிட்டதால் தற்போது கழிவுநீர் ஓடை கட்ட பகுதி 2 திட்டத்தில் மதிப்பீடு சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்தபின் பணி மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**து. சந்திரசேகரன்,** ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி

## பிரச்சினை

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், குடவாசல் தாலுகா, கொரடாச்சேரி ஒன்றியம், விஸ்வநாதபுரம் ஊராட்சி

ஒன்றியம் கிராமத்தையும் நீடாமங்கலம் தாலுகா நீடாமங்கல் அனுமந்தபுரம் ஊராட்சி ஒட்டக்குடி மேல்கரை கிராமத்தையும் இணைக்கும் நடைபாலம் வெண்ணாற்றின் குறுக்கே மிகவும் சீர்கெட்டு உள்ளது. பொது மக்கள் இந்த பாலத்தின் வழியே நடந்து செல்வது மிகவும் அபாயகரமானதும் அச்சத்திற்குள்ளதுமாக உள்ளது. இப்பாலத்தினைப் பயன்படுத்தி 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பள்ளி,கல்லூரிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள்,அரசுப்பணிக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள்,குறிப்பாக நோயாளிகள் தினந்தோறும் செல்ல வேண்டியுள்ளது. அதுபோல மக்கள் பெரிதும் அல்லலுக்கு ஆளாகின்றனர். விவசாயிகள் இடுபொருட்கள் எடுத்து வரவும், விளை பொருட்களை எடுத்துச் சென்று வாணிபம் புரியவும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பழுதுபட்ட பாலத்தினை வண்டிப்பாலமாக மாற்றினால் கொரடாச்சேரியி லிருந்து மன்னார்குடிக்கு சுமார் 12 கி.மீ. குறைந்த பயணமும் பல குக்கிராமங்களுக்கு வசதியான பஸ் வசதியும் ஏற்படும். இந்தப்பாலம் சம்பந்தமாகக்கடந்த 1990 முதல் பலமுறை முதலமைச்சர், அமைச்சர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலை துறை இயக்குனர்கள், மாவட்ட ஆட்சியர் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகிய அனைவர்க்கும் பலமுறை மனுக்கள் அளித்தும் இதுவரை எந்தப்பயனும் ஏற்படவில்லை. மாவட்ட ஆட்சியர் திரு. ஸ்கந்தன், கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) திரு. வீராசாமி ஆகியோர் பாலத்தினை பார்வையிட்டு உடன் ஏற்பாடு செய்து தருவதாக உறுதி அளித்து சென்றார்கள்.

தற்சமயம் இப்பாலம் ஊராட்சிஒன்றியப்பராமரிப்பில் இருந்துவருகிறது. பாலத்தினை மேம்பாடு செய்யவோ அல்லது வண்டிபாலம் கட்டவோ ஊராட்சி ஒன்றிய நிதி ஆதாரங்களைக்கொண்டு செய்ய இயலாது என்பது தெரிகிறது. எனவே மேற்படி பாலம் நெடுங்சாலைத் துறையினர் மூலம் பகுதி -2 திட்டத்தில்தான் செய்ய இயலும் அல்லது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் அங்காடி மைய கிராமச் சாலைகள் திட்டப்பிரிவின் கீழ் செய்ய இயலும் என்றும் தெரியவருகிறது. எனவே தாங்கள் இப்பகுதி கிராமமக்களின் நீண்ட நாள் கனவினை நனவாக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
**த.உ. கோவிந்தராசன்,** ஒட்டக்குடி, களத்தூர்
மேல்கரை, அஞ்சல் - 613 703, கொரடாச்சேரி.

## தீர்வு

**மே**ல்கரை கிராமத்தை இணைக்க வெண்ணாற்றின் குறுக்கே கட்ட வேண்டிய உயர் மட்டப்பாலவேலை, இக்கோட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தி வருகிற வேலைகளில் இடம் பெறவில்லை. உலக வங்கிக் கடன் திட்டத்தில் செயல்படுத்த வேலைகள் தேர்வு செய்ய விவரம் கோருகிறபோது உரிய விவரம் முன்னுரிமை வழங்கி அனுப்பிவைக்கப் படும் என அன்புடன் தெரிவிக்கிறேன்.

**எஸ்.எஸ். கருப்பையன்,**
கோட்டப்பொறியாளர்,
த.நா.வே.வ. திட்ட கோட்டம், மன்னார்குடி.

## பிரச்சினை

**எ**ங்கள் கிராமத்திற்கு பொது தொலைபேசி இணைப்பு வேண்டி பலமுறை விண்ணப்பித்தும், பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரை கடிதம் இணைத்து அனுப்பியும் கடந்த 5,6 ஆண்டுகளாக மனு மீது மனு அனுப்பியும் பொது தொலைபேசி இணைப்பு அமைக்கவில்லை. எங்கள்கிராமத்திற்குப் பொதுத் தொலைபேசி இணைப்பு,கிடைக்க ஆவன செய்யவும்.

இப்படிக்கு,
**ஆதிநாராயணன்,**
நாஞ்சலூர் அஞ்சல், சிதம்பரம் வட்டம்,
தென்னாற்காடு மாவட்டம் - 608302

## தீர்வு

**தொ**லைபேசி இல்லாத கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி வழங்க வேண்டும் என்று இந்திய அரசு 1991 ஆம் ஆண்டு கொள்கை வகுத்துள்ளது. சில கிராமங்களில் தனியார் தொலைபேசி இருப்பதால் இந்தச் சலுகை கிடைப்பதில்லை. தாங்கள் குறிப்பிட்ட நாஞ்சலூர் கிராமத்தில் தனியார் தொலைபேசி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள கொள்கையின் அடிப்படையில் தொலைபேசி வழங்க இயலாது. எனினும் இதுபோன்ற (தொலைபேசி உள்ள) கிராமங்களுக்கு இனிவரும் காலங்களில் தக்க கொள்கை வகுக்கப்படும்போது தொலைபேசி வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**மாவட்ட மேலாளர்** (தொலைபேசி)
கடலூர் - 1

*எந்த ஒரு நல்ல காரணத்திற்காகவும் இறக்கத் தயாராயிருப்பவர்கள், அரிதாகவே தோல்வியுறுகின்றனர்.*

***– ஜவகர்லால் நேரு***

# கலைவாணர் புகழ் வாழ்க!



சீர்திருத்தக் கொள்கைகளை பகுத்தறிவுக் கருத்துக் களைத் தமிழ்த் திரைப்படங்களின் வாயிலாக உலாவரச் செய்து சமுதாயத்தில் மறு மலர்ச்சி பாயச்செய்த பெருமை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களைச் சாரும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் அருகில் உள்ள ஒழுகினசேரியில் சுடலை முத்து - இசக்கியம்மாள் தம்பதியின் மகனாக 29.11.1908-இல் பிறந்தவர் என்.எஸ். கிருஷ்ணன். அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் சிறுவயதிலேயே கலை ஆர்வம் என்னும் செல்வத்தை மிக அதிக அளவில் பெற்றிருந்தார்.

நாடகங்களில் நடித்தார்; நடிப்புலகில் ஒளிவீசித் திகழ்ந்தார். நகைச்சுவைப் பாத்திரத்தையே விரும்பி ஏற்றார். நாடெல்லாம் போற்றும் நகைச்சுவை நடிகரானார். காலத்தின் கட்டாயத்தால் நாடக உலகிலிருந்து திரைப்பட உலகில் புகுந்தார்; திரைப்பட நடித்தார்; திக்கெலாம் புகழ் தேடிக் கொண்டார். கலைவாணர் என்னும் பட்டத்தையும் பெற்றார்; மக்களின் கவலையையும் கண்ணீரையும் நகைச்சுவை மருந்து கொண்டு நீக்கினார்.

நகைச்சுவை வெடிகளை உதிர்ப்பதுடன் நல்ல. நல்ல கருத்து மணிகளையும் மக்கள் மன்றத்திற்குக் காணிக்கை ஆக்கினார். சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக்காரராக விளங்கினார்.

அவரது மேதையைத் தமிழகத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களெல்லாம் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள். அறிஞர் பெருமக்களையும் அரசியல் விற்பன்னர்களையும் தமது அருங்கருத்துகளால் - அதிசயிக்க வைத்த பெருமை சிரிப்புக் கடலிலே மூழ்க வைத்த திறமை கலைவாணரின் தனி உடைமை!

''கலை காலத்தை வெல்வது, கலைவாணருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு இருக்கிறது. கலைக்கல்லூரி அமைத்து அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்'' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைவாணரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''நமது நகைச்சுவை அரசு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும் அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்ல வேண்டும்.

''நாடகப் புரட்சி உலகைப் பற்றிச் சரித்திரம் எழுதப் பட்டால், அச்சரித்திரத்தின் அட்டைப் பக்கத்தில் என்.எஸ். கிருஷ்ணன் படம் போடாவிட்டால் அச்சரித்திரம் தீண்டப் படாதாகிவிடும்'' - தந்தை பெரியாரின் பாராட்டு வாசகம் இது.

''கிருஷ்ணன் தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் மகான்.

''கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார். அதை விளையாட்டுப் பொம்மையாக அடித்து விடுகிறார்'' - மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. கலைவாணரை இப்படிப் போற்றிப் புகழ்ந்தார்.

சிறுகுழந்தை முதல் வயது முதிர்ந்தவர்வரை கலைவாணரின் நகைச்சுவையில் சொக்கிப் போயிருக் கிறார்கள் என்பதைத் திரையுலக வரலாறு நமக்கு எடுத்துச் சொல்கிறது.

கருத்துச் செல்வத்தை மட்டுமல்ல; கையிலிருந்த பொருட் செல்வத்தையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி இதயம் மகிழ்ந்தவர் கலைவாணர்.

தனிப்பட்ட முறையில் தன்னை அணுகிவந்து பணஉதவி கேட்டவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் அவர்.

வாரி வழங்கிய வள்ளலே 1957 ஜூலை மாதத்தில் நோய்க்கு ஆளானார். சிலநாள் சென்னை பொது மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார். எனினும் நோய் குணமாகவில்லை.

ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் நாளன்று இன்னுயிர் நீத்தார். மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன என்றாலும், அவரைப் பற்றிய நினைவுகள் தமிழ்மக்களின் நெஞ்சில் நீங்காது நிலை பெற்றிருக்கின்றன.

1969-இல் அவரது திருவுருவச்சிலை தியாகராய நகர் வாணிமகால் அருகில் அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அண்ணா பங்கு பெற்ற கடைசிப் பொதுநிகழ்ச்சியாக அது அமைந்தது. அதன் பின்னர் அண்ணா, உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சேர்ந்தார். சிகிச்சை பயனின்றி பிப்ரவரி 3-இல் மறைந்தார்.

கலைவாணரின் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துகள் சிறந்தோங்கியிருந்ததற்கும் அந்தப் பாடல்கள் மக்களைக் கவர்ந்ததற்கும் - பாடல் எழுதிய உடுமலை நாராயண கவிக்கும் பெரும் பங்கு உண்டு. உடுமலையாரை நன்கு வேலை வாங்கி, தனக்கு ஏற்ற விதத்தில் பாடல்களை எழுதவைத்த திறமை கலைவாணருக்கு மட்டுமே உண்டு.

– எஸ்.எஸ். சுந்தரம்

# கணிப்பொறியின் கதை



கம்ப்யூட்டர் என்று அழைக்கப்படும் கணிப்பொறி பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே இருந்துவந்துள்ளது.

'Abacus' என்று அழைக்கப்படும் கணிப்பொறி *4000* ஆண்டுகளுக்கு முன்னரே மத்திய தரைக்கடல் நாடுகளில் (அரேபியா, துருக்கி போன்ற முகம்மதிய நாடுகள்) உருவாக்கப்பட்டது. அது இன்றுவரை பயன்பட்டு வருகிறது.

பதினேழாம் நூற்றாண்டில் காலத்திற்கேற்ப மாறுதல்கள் செய்யப்பட்ட கணிப்பொறிகள் அறிமுகம் செய்யப்பட்டன. ப்லெய்ஸ்பாஸ்கல் என்ற ஃப்ரெஞ்சுக்காரர் இயந்திர வடிவில் கணிப்பொறி ஒன்றை உருவாக்கினார். இந்த இயந்திரம் சக்கரங்களின் மீது பொருத்தப்பட்டிருந்தது. சக்கரங்கள் சுழலும் போது எண்கள் தசம முறையில் மாறின. எண்களை கூட்டவோ, கழிக்கவோ வேண்டுமென்றால் சக்கரங்களைச் சுழற்ற வேண்டும்.

கொஞ்சம் காலத்திற்குப் பிறகு 1833ல் சார்லஸ் பேப்பேஜ் என்பவர் ஃப்ரெஞ்சுக்காரரின் கணிப்பொறியில் எஞ்சின் ஒன்றைப் பொருத்தினார். கணித வாய்ப்பாடுகளை இதனால் சுலபமாகக் கண்டறிய முடிந்தது.

*1946*-ல் மின்சாரக் கணிப்பொறி உருவாக்கப்பட்டது. அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தில் அது உருவாக்கப்பட்டது 'ENIAC' என்று (Electronic Numerical Interrater and Calculator) அது அழைக்கப்பட்டது. வால்வுகள் இதற்கு ஆதாரமாக இருந்தன. மின்சாரக் கணிப்பொறிகள் ராணுவத்தில் குண்டுகளை எறியும் இலக்குகளைக் கணித்தறிய உதவின.

தொழில் துறை வளர, வளர வால்வுகள் மறைய டிரான்சிஸ்டர்கள் இடம் பெற்றன. ஒருங்கிணைந்த மின்சுற்று என்ற அவை IC என்று சுருக்கமாக அழைக்கப்பட்டன. கணிப்பொறிகளின் வடிவங்கள் நாளுக்கொரு மாற்றம் பெறலாயின. அளவில் சுருங்கின. அனைவருக்கும் பயன்படுகிற Digital Electronic Computer என்ற கணிப்பொறி *1951*ல் விற்பனைக்கு வந்தது.

இன்று இந்தக் கணிப்பொறிகள் LSI (Large Scale Integration)-ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. வால்வுகள், டிரான்ஸிஸ்டர்கள், IC க்கள், LSI க்கள் என்று கணிப்பொறி மாற்றம் பெற்றதை முறையே முதல் தலைமுறை, இரண்டாம் தலைமுறை, மூன்றாம் தலைமுறை, நான்காம் தலைமுறை எனப் பெயர் சூட்டியுள்ளனர். தலைமுறைகள் மாற மாறக் கணிப்பொறிகளின் வடிவம் வேலை செய்யும் வேகம் போன்றவையும் மாறி வருகின்றன.

இப்போது VLSI (Very Large Scale integration) என்ற கணிப்பொறி ஐந்தாவது தலைமுறை என மதிக்கப்படுகிறது. மனிதன் கட்டளையிட சொற்களை உருவாக்கவும், நிகழ்ச்சிகளைச் சங்கேத மொழியில் அமைக்கவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் இந்தக் கணிப்பொறியில் முடியும். விரைவில் இது தனக்குத்தானே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், தானே முடிவு செய்து கொள்ளவும் வலிமைபெற்றுவிடும்.

ஜப்பானில் ஆறாவது தலை முறை கணிப்பொறியைப் பற்றி ஆராயத் தொடங்கிவிட்டார்கள். மனித மூளையின் இயக்கத்தைப் பற்றியும், தனக்குத்தானே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது பற்றியும் இந்தக் கணிப்பொறி முயலும்.

இந்தக் கணிப்பொறி முற்றுப்பெற்றால் நான்காவது தலைமுறைக் கணிப்பொறி இயங்கியதைவிடப் பத்து கோடி முறை வேகம் கொண்டதாக இதன் செயல்பாடுகள் அமையும்!

**– சேலம் சக்திக்கொடி**

**நன்றி: கலைக்கதிர், செப்டம்பர் 1993**

இந்த மழைக்காலத்தில், எங்கும் பரவலாகக் காணப்படும் நோய் மலேரியா ஆகும். சரியானபடி கவனிக்கத்தவறிவிட்டால், இதுவே பல பக்க விளைவுகளை ஏற்படுத்தி, உயிருக்கேகூட ஆபத்தை உண்டாக்குமளவிற்கு முற்றிவிடவும் கூடும்.

குறிப்பாக இளம் வயதினரையே இந்நோய் மிக எளிதில் பற்றுகிறது. ஆகவே, இந்த மலேரியா நோய்ப்பற்றிய சிலவிஷயங்களை நாமெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியது இப்போது அவசியம்.

சின்னஞ்சிறு மழலைகள் மலேரியாவிலிருந்து தப்ப வேண்டுமானால் – கொசுக்கடியிலிருந்து, குறிப்பாக இரவு நேரங்களில் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.


உங்கள் குழந்தைக்கு மலேரியாதான் வந்திருக்கிறது என்று தீர்மானமாகிவிட்டால் காய்ச்சல் கண்ட குழந்தையைக் குளுமையாக வைத்திருங்கள்; ஆனால், குளிர்ச்சியாக வைக்கக் கூடாது.

தக்க மருந்து மாத்திரைகள் உட்கொண்டபின் மலேரியாவிலிருந்து குணமாகும் குழந்தைக்கு, அதிக அளவில் திரவ ஆகாரங்களும் சாப்பாடும் தேவைப்படும்.

கொசுக்கடியால்தான் பெரிதும் மலேரியா பரவுகிறது. ஆதலால், குழந்தைகளைக் கொசு அண்டாமல் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். கொசுக் கடியிலிருந்து பாதுகாக்கப் பல நடவடிக்கைகள் உள்ளன.

இரவில் கொசு வலைகளைப் பயன்படுத்தலாம்.

# மழை மழலை மலேரியா



டாக்டர் ஆர். உமா

கொசு முட்டைகளை அழித்துவிடுவதோடு, அதன் உற்பத்தியையே தடுத்துவிடத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மலேரியா காணப்படும் பகுதிகளில் வாழும் கர்ப்பிணிப் பெண்கள், மலேரியாத் தடுப்பு மாத்திரைகளைக் கர்ப்பகாலம் முழுவதும் பிரசவமாகும் வரை தொடர்ந்து உட்கொண்டு வரவேண்டும்.

மலேரியா பரவியுள்ள பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்குக் காய்ச்சல் வந்தால், உடனே நலப்பணியாளரிடம் செல்லவேண்டும். அந்நோய் மலேரியாவே எனக் கண்டுபிடிக்கப்பட்டால், மலேரியா தடுப்பு மருந்துகளைக் குணமாகும் வரை கொடுத்து வரத் தயங்கக் கூடாது.

கொசுவத்திச் சுருள்களை அளவோடு, எரிக்கலாம்; மின்சாரத்தின் மூலமும் கவனமாக அதைப் பயன்படுத்தலாம்.

வீட்டின் கதவுகள், ஜன்னல்களிடையே கொசு புகாதவாறு வலை அடித்து வைப்பதும் நல்லது.

கொசு உற்பத்தியாகும் இடங்களை மருந்தடிக்கச் செய்து அழித்தல் வேண்டும்.

சமூகத்திலுள்ள அனைவரையுமே, கொசுக் கடியிலிருந்து பாதுகாக்க வேண்டும், ஏனெனில், மலேரியா கண்ட ஒருவரைக் கடித்த கொசுவானது, பறந்துபோய் மற்றொருவரைக் கடிக்கும்போது, கடிபட்ட அவருக்கும் மலேரியா தொற்றிவிடும் அபாயம் இருக்கிறது.

எங்கெல்லாம் தண்ணீர் தேங்கி நிற்கிறதோ, அங்கெல்லாம்தான் அதிக அளவில் கொசு உற்பத்தியாகிறது. குளம், குட்டைகள், சாக்கடைகள், சில சமயங்களில் தண்ணீர்த் தொட்டிகள், சகதிகளில்கூட தண்ணீர் தேங்கிநிற்கும்; அங்கும் கொசு உற்பத்தியாகும். புதர் மண்டிய ஓடைகளின் கரையோரங்களிலும் இதற்கு வாய்ப்புண்டு. தண்ணீர் சேருகிற, அல்லது தேங்குகிற இடங்களில் கொசு மருந்தையோ, மண்ணெண்ணெயையோ தெளித்து, கொசுக்களை அழிக்கலாம்; அதன் இன உற்பத்தியைத் தடுக்கலாம்.



சுற்றுப்புறத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருப்பதனாலும், தண்ணீர் தேங்கவிடாமல் செய்வதனாலும் கொசு உற்பத்தியைக் குறைக்கலாம்; அல்லது கட்டுப்படுத்தலாம்.

மலேரியா நோய் கண்ட கர்ப்பிணிப் பெண்கள், மற்றவர்களைவிட இருமடங்கு வேதனைப்பட நேரிடும். கர்ப்ப காலத்தில் இவ்வியாதி வருவது மிகவும் ஆபத்தானது. இது இரத்தச் சோகைக்கு அவர்களை ஆளாக்கி விடும். கருச்சிதைவுக்கும் இது வழி வகுக்கும். குறைப்பிரசவத்திற்கும்காரணமாகும். குழந்தை இதனால் இறந்தே பிறந்திடவும் நேரிடும். மலேரியாவால் தாக்கப்பட்ட தாய்க்குப் பிறக்கும் குழந்தை மிகச் சிறியதாகவும், பலவீனமாகவும் எடைக்குறைவாகவும் எளிதில் தொற்று நோய்க்கு ஆளாகிற நிலையிலும்தான் பிறக்கும்.

ஆகவே கர்ப்பிணிப் பெண்கள், கர்ப்ப காலம் முழுவதும் பிரசவமாகும் வரை தொடர்ந்து, மலேரியாத் தடுப்பு மருந்துகளை அலுக்காமல் சாப்பிட்டு வரவேண்டும்.

நலப்பணியாளரிடமிருந்தோ, மருத்துவ மனையிலிருந்தோ தான் கர்ப்பிணிகள் மலேரியாத் தடுப்பு மாத்திரைகளைப் பெற வேண்டும். ஏனெனில் எல்லா மலேரியாத் தடுப்பு மருந்துகளையும் கர்ப்ப காலத்தில் பெண்மணிகள் உபயோகப்படுத்தக் கூடாது.

ஒரு குழந்தைக்குக் காய்ச்சல் வந்து, அது மலேரியாதான் என நிரூபணமானால், மலேரியா தடுப்பு மருந்துகளைக் குணமாகும் வரை கொடுத்துவர வேண்டும். குறைந்தது பத்து நாட்களுக்குக் கொடுக்க வேண்டிவரும்.

கைக்குழந்தைகளானால் எப்படித் தருவது என்ற கேள்வி எழலாம்; அப்படிப்பட்ட சிசுக்களுக்கு மலேரியாத் தடுப்பு இனிப்பு மருந்து கொடுக்கலாம்.

காய்ச்சல் விரைவில் நின்று போனாலும் கூட, பத்து நாட்கள் வரை மருந்து கொடுப்பதை நிறுத்திவிடக் கூடாது.

மலேரியாப் பகுதியானாலும் கூட, காய்ச்சல் இல்லாத குழந்தைகளுக்கு மலேரியா





நேரத்தில் மிகக் குளிர்ந்த நீர் கூடாது.

கனமான ஆடைகளைக் குழந்தைகளுக்கு உடுத்தக்கூடாது, கனமான போர்வைகளைப் போர்த்துதலும் ஆகாது.

மலேரியா நோய், சக்தியை அழித்து விடுகிறது. வியர்வையால் ஏராளமான நீரிழப்பு ஏற்பட்டுவிடுவதே இதற்கு முக்கியக் காரணம் ஆகும்.

எனவே - கூடுதல் உணவும், திரவ ஆகாரமும், அப்படிப்பட்ட குழந்தைக்குத் தரவேண்டும்; அவ்வாறு செய்வது இந்த இழப்பை ஈடு செய்யும். அதிக உணவும் திரவ ஆகாரமும் கொடுப்பதன் மூலம் மலேரியாவின் போது இழந்த சக்தியை ஈடு செய்துவிட இயலும். இது ஊட்டச்சத்துக் குறைவும் நீரிழப்பும் ஏற்படாமல் செய்ய உதவும்.

மாத்திரைகள் கொடுக்கக் கூடாது. இது, வளரும் குழந்தைகளின் இயற்கையான எதிர்ப்புச் சக்தியைத் தடுத்துவிடக்கூடும்.

காய்ச்சல் கண்ட குழந்தையைக் குளுமை யாக வைத்திருப்பது எப்படி யென்றால், காய்ச்சலைக் குறைக்கும் மாத்திரையான 'பேரசிட்டமால்' கொடுத்தால் இதற்குப் போதுமானது.

குளிர்ந்த தண்ணீர் ஒத்தடம் கொடுத்தல் அல்லது குளிர்ந்த தண்ணீரால் உடல் முழுவதும் ஒத்தி எடுத்தல் குழந்தைகளுக்கு நல்லது; அதே

மலேரியா நோயைப் பொறுத்தவரை, இளம் பிராயத்தினரை இவ்வாறெல்லாம் முன்னெச்சரிக்கையோடு பாதுகாத்தே ஆக வேண்டும். இல்லையேல், அவர்களை மலேரியா நோயினின்றும் காப்பாற்ற முடியாமலே போய்விடும்.

பெரியவர்களுக்கு மலேரியா நோய் கண்டால், உடனே தக்க மருத்துவரை அணுகித் தன்னைப் பரிசோதித்துக் கொள்ளவும், தக்க மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டுவரவும் அவர்கள் தயங்கவே கூடாது.

## நேருவும் புகைப்பட நிபுணர்களும்!

1962ல் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்திருந்த ஜவகர்லால் நேருவைப் புகைப்படக் காரர்கள் நெருக்கியடித்துக்கொண்டு புகைப்படம் பிடித்தனர். சில புகைப்பட நிபுணர்கள் கீழே குனிந்து அவருடைய காலையே படம் பிடித்தனர்.

''அங்கே என்ன இருக்கிறது என்று படமெடுக்கிறீர்கள்?'' என்று கேட்டார் நேரு.



ஒரு புகைப்பட நிபுணர், சிரிப்புடன் அவர் கழற்றிவிட்டிருந்த காலணிகளைக் காட்டினார். அதில் ஒன்றில், காலின் கட்டை விரல் வைக்கும் இடத்தில் தேய்ந்துபோய் ஓட்டை விழுந்திருந்தது!

வேளாண்மை :

# குட்டை மக்காச்சோளம்

மக்காச்சோள இனத்தைச் சார்ந்த 'பேபிகார்ன்' என்னும் குட்டை மக்காச் சோளம் சமீபகாலமாக மிகவும் பிரபலமடைந்து வருகிறது. இதன் கதிர்களை 'சாலட்' போல பச்சையாகச் சாப்பிடலாம். இதிலிருந்து சத்து நிறைந்த ரசம் (சூப்) தயாரித்தும் அருந்தலாம். இவற்றின் முதிராத இளம் கதிர்களையே உண்ணவேண்டும்.

இதர தானிய மக்காச்சோளப் பயிர்களைப் போல் அல்லாமல், 'பேபிகார்ன்' குட்டையாக (சுமார் மூன்றடி உயரம்) வளரும் தன்மை உடையது. பயிர் வளர்ந்ததும் கணுக்களில் சிறிய மக்காச்சோளக் கதிர்கள் உருவாகும். ஒரு செடிக்கு சுமார் 3 கதிர்கள் உற்பத்தியாகும். செடியில் தோன்றும் ஆண் பூக்களை அவை மலர்வதற்கு முன்பாக வெட்டிவிட வேண்டும். இதனால் மகரந்த சேர்க்கை நடைபெறாமல் சூலகங்கள் மட்டும் வளரத் தொடங்கும். சுமார் 50 கிராம் எடையுள்ள இளம் கதிர்களை அறுவடை செய்யலாம்.

இறவையில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம் இவற்றை 45 செ.மீ. 15 செ.மீ. என்ற இடைவெளியில் பார்களில் நடவேண்டும். ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதைகள் தேவை. ஒரு ஏக்கருக்கு சுமார் 40000 செடிகள் வரை நடவு செய்யலாம். அடியுரமாக ஏக்கருக்கு 40:40:15 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இடவேண்டும். நட்ட 30 நாட்கள் கழித்து ஏக்கருக்கு 40:15 கிலோ தழை, சாம்பல் சத்து மேலுரமாக இடவேண்டும். வாரம் ஒரு முறை நீர்ப் பாய்ச்சினால் போதுமானது.


'பேபிகார்ன்' விதைத்த 65 நாளில் பூக்கத் தொடங்கும். 10-வது நாள் முதல் கதிர்களை அறுவடை செய்யலாம். ஒரு வருடத்தில் மூன்று பயிர்கள் வரை சாகுபடி செய்யலாம். ஒரு செடியிலிருந்து சுமார் 3 கதிர்கள் கிடைக்கும். ஒரு கிலோவுக்கு கிட்டத்தட்ட 20 கதிர்கள் இருக்கும். ஒரு கதிரிலிருந்து 2.5 டன் மகசூல் பெறலாம்.

'பேபிகார்ன்' ஒரு குறுகிய காலப் பயிராகையால் சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சம் ரூ. 5000 மட்டுமே ஆகும். ஒரு கிலோ கதிரின் பண்ணை விலை ரூ. 10 ஆகும். ஒரு ஏக்கரிலிருந்து பயிருக்கு ரூ. 25,000 கிடைக்கும். ஒரு வருடத்தில் மூன்று பயிர்களிலிருந்து ஏக்கருக்கு ரூ. 75,000 மொத்த வருமானம் கிடைக்கும். சாகுபடி செலவுகள் போக நிகர லாபமாக ஏக்கருக்கு ரூ. 60,000 வரை ஒரு வருடத்தில் பெற வாய்ப்பு உள்ளது. பேபிகார்னுக்கு ஹோட்டல்கள், சூப்பர் மார்க்கெட் மற்றும் பெரிய நகரங்களில் இவை அதிகமாக உள்ளது.

வெளிநாடுகளில், குறிப்பாக சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சீன மக்கள் குழந்தை மக்காச்சோளத்தை மிகவும் விரும்பி சாப்பிடுகிறார்கள். நம் நாட்டில் டெல்லியைச் சுற்றி பேபிகார்னை சாகுபடி செய்து நல்ல இலாபம் அடைகிறார்கள். கோயம்புத்தூரில் சில முன்னோடி விவசாயிகள் இதன் சாகுபடியைத் தொடங்கியுள்ளனர். விதையும் கிடைக்கிறது.

எளிதாக சாகுபடி செய்து உள்ளூரிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்யலாம். அதிக இலாபம் கொடுக்கக்கூடிய இந்தப் பணப்பயிரை விளைவித்து வணிக வேளாண்மையைப் பலரும் மேற்கொள்ளலாம்.

டி. ஆறுமுகம்
உதவிப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்



## இளமை என்றொரு வித்து

ஆலமரம் அடங்கியிருப்பது ஒரு சிறு விதைக்குள்ளேதான். ஆற்றலுற்ற வாழ்வு தங்கியிருப்பது இளமை எனும் பருவத்துள்ளேதான்.

காலை அரும்பி மாலை உலரும் மலரினத்தைப் போல, இளமை என்பது குறுகிய காலமே மணம் வீசக்கூடியதுதான் ஆனால், அந்தக் குறைந்த காலத்திலும் இனிமையைக் கொடுக்க வல்லது; வருங்கால வாழ்க்கையில் வரப்போகும் சாதனைகளுக்குக் கட்டியம் கூறவல்லது. இதனை வாடாத மலர்களாக, ஓயாதுழைத்து உயர்ந்த வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையில் காண முடியும்.

### குறிப்பெடுக்காதவர் அண்ணா

பேரறிஞர் அண்ணா அவர்கள் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் மேல்படிப்புக்காகச் சேர்ந்தார். ஆங்கில வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பேராசிரியர் மிகவும் ஆர்வமாகப் பாடத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். அனைத்து மாணவ, மாணவியரும் பேராசிரியரின் உரையை விடாமல் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு மாணவனையும் கூர்ந்து கவனிப்பதில் கெட்டிக்காரரான பேராசிரியர், அண்ணாத்துரை என்ற மாணவனை நோட்டம் விட்டார். பேராசிரியர் சட்டென்று நடத்திய பாடத்தை விட்டுவிட்டுக் கோபமாக அண்ணாத்துரை இடம் சென்றார். அண்ணா, பேராசிரியரின் பாடத்தைக் குறிப்பெடுக்காமல் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

'அண்ணாதுரை, வகுப்பில் ஏன் நீ மட்டும் குறிப்பெடுக்க வில்லை, சும்மா உட்கார்ந்து இருக்கிறாய்?' என்று சற்றுச் சூடாகக் கேட்டார் பேராசிரியர்.

அதற்கு அண்ணா அவர்கள், 'குறிப்பு எடுப்பதையோ, அப்படி எடுத்த குறிப்புகளை மனப்பாடம் செய்வதையோ நான் வெறுத்து ஒதுக்குபவன் ஐயா' என்றார்.

அண்ணாவின் பதிலால் எரிச்சலடைந்த பேராசிரியர், 'சரி நான் இதுவரை நடத்திய பாடத்தைத் திருப்பிச் சொல் பார்க்கலாம்' என்றார் கேலியாக.

'தாராளமாக' என்று சொன்ன அண்ணா, மடமடவென்று அதுவரை பேராசிரியர் நடத்திய பாடத்தைத் தனக்கேயுரிய அடுக்கடுக்கான ஆங்கிலச் சொற்களில் அழகாகச் சொன்னார்.

அசந்துபோன பேராசிரியர், 'திமிர்பிடித்தவன் நீ என்று, நான் நினைத்தது தவறுதான்' என்று மனசுக்குள் சொல்லிவிட்டு அண்ணாவைப் பாராட்டினார்.

பின்னர், அண்ணா அவர்கள் அனைத்துத் தேர்வுகளிலும் முதன்மை பெற்றதும், அவருடைய அடித்தல் திருத்தல் இல்லாத விடைத்தாள் பாதுகாக்கப்பட்டு, எல்லோரையும் கவர்ந்தது என்பதும் அனைவரும் அறிந்த செய்தி. அந்தப் பழக்கமே, பின்னர், மேடையில் சக தோழர்களின் பேச்சைக் கவனித்துப் பின்னர் அவைகளைத் தன் உரையில் மேற்கோள் காட்டிப் பேசுவதற்கு அடிச்சுவடாக அமைந்தது எனலாம்.

# சுவைமிகு செய்திகள்

இதேபோல், மகாகவி பாரதியாரின் இளமைக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் காணலாம்.

### பார், அதி சின்னப்பயல்

சுப்பிரமணியன் எட்டயபுரத்தில் தன்னுடைய இளமைப் பருவத்தைக் கழித்துவந்தான். சின்னஞ்சிறு வயதிலேயே தோப்புத் துறவுகளிலும், ஆற்றங்கரைகளிலும் சிந்து பாடிக் கொண்டே விளையாடித் திரிந்தான். இளம் பருவத்திலேயே, இத்தகைய கவிபுனையும் ஆற்றலைக் கண்ட எட்டயபுரத்து சமஸ்தானப் புலவர்கள், சுப்பிரமணியத்தைத் தங்கள் சபையிலே அழைத்துச் சோதித்தார்கள். அவனுடைய அபாரத் திறமையைக் கண்டு, போற்றிப் புகழ்ந்து பாராட்டி, 'பாரதி' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கிகவுரவித்து மகிழ்ந்தார்கள்.

ஒருமுறை அவ்வூரைச் சேர்ந்த செல்வந்தர் காந்திமதிநாதப் பிள்ளை என்பவர், பாரதியைக் கிண்டல் செய்தார். பிறகு கேலியாக, ''பாரதி சின்னப்பயல்' என்ற அடியைக் கடைசி அடியாகக்

கொண்டு ஒரு பாட்டுப் பாடு என்றார். உடனே பாரதியோ, ஈற்றடியாக, 'காந்திமதிநாதனைப்பார்; அதி சின்னப்பயல்! என்று பாடினார். வியந்துபோன செல்வந்தர், பாரதியைக் கட்டிப்பிடித்து உச்சிமோந்தார். அந்தச் சிறுவனே பின்னர் மகாகவி பாரதியாக உருவெடுத்தார்.

## 'அகல்யா' எனும் கவிஞர்

கவிஞர் பட்டுக்கோட்டைக்கல்யாணசுந்தரம் தனது இளம் வயதில், புதுச்சேரியில் பாவேந்தர் பாரதிதாசனாருடன் வாழ்ந்து வந்தார். பாவேந்தர் தன்னுடன் உள்ளவர்களைப் பாராட்டி ஊக்குவித்துக் கவிதை எழுதச்செய்வார். ஒருநாள், பட்டுக்கோட்டையார் தான் கொண்டுவந்திருந்த ஒரு கவிதைப் பத்திரிகையைப் பாவேந்தர் புரட்டிக் கொண்டிருந்தார். அதில் நறுக்கென ஒரு நல்ல கவிதை தென்பட்டது. எழுச்சிமிகுந்த பொதுவுடைமைக் கொள்கைப் பாடல் அது. பாவேந்தர், பட்டுக்கோட்டையாரிடம் 'தம்பி, அகல்யா என்பவர் எழுதிய இதுபோன்ற பாடல்களை நீயும் எழுதிப் பழகணும், என்ன அற்புதமான பாட்டு' என்று அறிவுரை செய்தார்.

புன்னகையுடன் ''சரிங்க அய்யா'' என்று சொன்னவர், மெதுவாக ''அந்தப் பாட்டை எழுதிய அகல்யா நான்தான்யா'' என்று சொன்னார்.

கலகலவெனச் சிரித்த பாவேந்தர், ''தம்பி, நீ எப்போது 'அகல்யா' ஆனாய்?'' என்று கேட்க – ''நான் அ. கல்யாணசுந்தரம்தானே ஐயா? முதல் நான்கெழுத்தை எடுத்து அப்படிப் போட்டேன்'' என்றார் . பாவேந்தர் அவரை வாய்விட்டுப் பாராட்டினார். அதன்பின்பு ''இம்மாதிரியான புரட்சிமிக்க பாடல்களை எழுதும் ஆற்றல்கொண்ட நீ இனிமேல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்ற பெயரிலேயே எழுது. தமிழ் உன்னை வாழ்த்தும்; தமிழர் தலை நிமிர்வர்,'' என்றார்.

அவரின் வாக்குப் பலித்தது. இன்றும் பட்டுக்கோட்டையாரின் புரட்சிமிகு பாடல்கள் ஒலிப்பதைக் கேட்கிறோம் அல்லவா?

## இளமைப்பலி எழுதிய சிறுவர்

முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தனக்கு 16 வயதாகும்போதே உணர்ச்சிமிகு கவிதைகளையும், கட்டுரைகளையும் படைத்தவர். அந்த வயதிலேயே, 'முரசொலி' என்ற கையெழுத்துப் பிரதியைத் தொடங்கி நடத்திவந்தார். ஒருமுறை 'இளமைப்பலி' எனும் புரட்சிக் கருத்துகள் கொண்ட ஒரு கட்டுரையை அறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய 'திராவிட நாடு' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார்.


அருமையான கட்டுரையாகக் கருத்துச் செறிவோடு இருந்ததால், அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் வெளியிட்டார். பின்னர் ஒருமுறை, திருவாரூருக்கு அண்ணா வந்தபோது, மறக்காமல், 'இளமைப்பலி' என்ற கட்டுரையை எழுதியவரை அழைத்துவரச் சொன்னார்.

பேரறிஞர் முன்னால், அடக்க, ஒடுக்கமாகப் பணிவோடு இளைஞர் கலைஞர் நின்று கொண்டிருந்தார். கலைஞர்தான் அந்தக் கட்டுரையை வடித்தார் என்பதை அறிந்தவுடன் அண்ணா அவர்கள் வியந்துபோனார். பாராட்டினார். பிறகு கலைஞர் மாணவராக இருந்த காரணத்தால், 'அவர் படிப்பில் ஆர்வம் செலுத்த வேண்டும். படித்து முடித்த பிறகு அரசியலுக்கு வரவேண்டும்' என்று அறிவுரை வழங்கினார்.

அந்தக் கலைஞர்தான் இன்றைக்கு முத்தமிழ் வித்தகராக, தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் ஒப்பற்ற தலைவராக, முதல்வராக விளங்கி வருகிறார்.


வாழ்க்கையில் இளமைக் காலத்தை வீணடித்துவிடக்கூடாது. அது ஒருமுறைதான் பூக்கும் மலர். அது வதங்கி வீணாகக் குப்பைக்குப் போய் விடக்கூடாது. என்றும் வற்றாத மணம் வீச வேண்டும்.

– எம்.வி.எம். அசோகன்




புரட்சி என்பது வாலிபத்தின் கூறு; பகுத்தறிவாளரின் ஆயுதம்; மக்களின் மகத்தான சக்தி; அதை அழித்திட எவராலும் இயலாது.

– அறிஞர் அண்ணா



# ''தித்திக்கும் திராட்சை''



திராட்சையின் தோற்றப்பகுதி காகஸ்தான் என்று கருதப்படுகிறது. காகஸ்தானிலிருந்து காபூல் வழியே திராட்சை இந்தியா வந்திருக்கலாம். இவ்வாறே காகஸ்தானிலிருந்து மத்திய ஆசியா வழியே எகிப்துக்கும், துருக்கியைத் தாண்டி கிரேக்க ரோமானிய எல்லைகளுக்கும் இத்திராட்சை சென்றிருக்கலாம்.

பழைய பைபிளில் நோவா அமைத்த திராட்சைத் தோட்டம் பற்றிய குறிப்பு உண்டு. இதனால் புராதண கால யூதர்களும் அராபியர்களும் வாழ்ந்த ஸெமிட்டிக் பிராந்தியம், அதாவது தென்மேற்கு ஆசியாவில் திராட்சை சுமார் 3000, 4000 ஆண்டுகளுக்கு முன்பே சாகுபடி செய்யப்பட்டது.

புகழ்மிக்க கிரேக்க அரசாட்சியின் பொருளாதாரம் மதுரச ஏற்றுமதியில்தான் அடங்கியிருக்கிறது. தொடக்கத்தில் பன்றித் தோல் பை அல்லது ஆட்டுத்தோல் பையில் மதுவை நிரப்பி ஏற்றுமதி செய்தனர். பிறகு (ஸெலட் பழங் குடியினர்) மரப்பீப்பாய்களைத் தயார் செய்தனர். நடுவில் இரும்புப் பட்டயம் அடிக்கப்பட்டது. கி.பி. 100 ஆண்டுகளுக்குப் பின்னர் மதுரசம் அனுப்பவே பீப்பாய்கள் தயாரிக்கப்பட்டன. கிரேக்கர்களை வென்ற ரோமானியர்களும் திராட்சை சாகுபடியிலும் மது உற்பத்தியிலும் ஈடுபட்டனர்.

திராட்சை சாகுபடிக்கு உரிய சிறப்பான தட்பவெட்பமும் இந்தியாவில் குறைவு. இன்று சுமார் 1500 எக்டேரில் சாகுபடியாகும் திராட்சை 4.08 இலட்சம் டன் உற்பத்தியாகிறது. உலக உற்பத்தியுடன் ஒப்பிடும்போது நமது பங்கு மிகக் குறைவு. திராட்சையின் இலத்தின் வழக்கு விட்டிஸ் வைனிபரா.இதில் விட்டிஸ், ஜீனஸ் பெயராகும். ஆகவே திராட்சை சாகுபடியை ''விட்டி கல்ச்சர்'' என்று கூறுவர்.

சமஸ்கிருதம், தமிழ், வங்காளி, அசாமி, ஒரியா, இதர திராவிட மொழிகளிலும் 'திராட்சை' ஒரு பொதுவான பெயர்ச்சொல். எனினும் இந்தி, உருது, பாரசீக மொழி வழக்கில் இது ''அங்கூர்'' எனப்படுகிறது.

இன்று இந்தியாவில் உற்பத்தியாகும் திராட்சையில் சுமார் 45 சதவிகிதம் கர்நாடகத்திலும் 20 சதவிகிதம் மகாராட்டிரத்திலும்,16 சதவிகிதம் ஆந்திர மாநிலத்திலும், 12 சதவிகிதம் தமிழ் நாட்டிலும் மீதி 7 சதவிகிதம் பஞ்சாபிலும் பயிராகிறது.

தமிழ்நாட்டில் மதுரை, திண்டுக்கல், நிலக்கோட்டை வட்டாரங்களில்தான் திராட்சை சாகுபடி பிரபலம். ஓரளவு தர்மபுரி மாவட்டத்திலும் உண்டு. இது மிகவும் செலவான சாகுபடி. ஒரு எக்டேருக்கு நிலத்தில் ரூ. 3,500 செலவு செய்தால் ஆண்டுக்கு ரூ. 30,000 இலாபம் பெறலாம்.

பெங்களூர் நீலம், பச்சை திராட்சை, ஸீமா ஸாயிபி, அனாப் ஸாயிபி, கறுப்பு சம்பகம், தாம்ஸன் ஸீட்லஸ், பன்னீர் ஆகிய ரகங்கள் சாகுபடியாகின்றன. திராட்சை வளர்ப்பில் பிரதான செலவு கான்கிரிட் அல்லது கல்லுக்கால் நட்டு கம்பிகளில் பந்தல் போட வேண்டியிருக்கும். பந்தல் உயரம் ஆறரை அடி வேண்டும். இது ஒரு அசுரக்கொடி, கவாத்து செய்யாமல் விட்டால் 50 அல்லது 60 அடி உயரம் வரை படரும் இயல்புள்ளது. நன்கு பராமரிக்கப்படும் திராட்சைக் கொடிகள் மூன்று ஆண்டுகளுக்கு நல்ல பலன் தரும்.

## உங்களுக்குத் தெரியுமா ?

**வினா:** தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏராளமான சொற்கள் இருக்கின்றன; ஒரு சொல்லை எழுதி, அப்படியே அதைத் திருப்பிப் படித்தாலும் அதே சொல் வர வேண்டும். தமிழில் இரண்டு, ஆங்கிலத்தில் இரண்டு சொற்களை உங்களால் சொல்ல முடியுமா?

**விடை:** விகடகவி, மோரு போருமோ?

MALAYALAM, KATTAK

(ஆர். முத்தம்மாள், ஸ்ரீவில்லிபுத்தூர்)

8 ஆம் பக்க தொடர்ச்சி

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் சுமார் பதினைந்தாண்டுக்காலம் சென்னை மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வசமே இருந்தது.

இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து அதுவரையில் சென்னை மாநகராட்சி காங்கிரசாரிடம்தான் இருந்தது.

## ஆட்சிப் பொறுப்பு

சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றிய தி.மு.கழகம், 1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்றுத் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின் நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தல்களிலும் கழகமே வெற்றிவாகை சூடியது. வேலூர் நாராயணன் வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தையானார்.

1969-70ல் திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

19970-71ல் திரு.சா. கணேசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1971-72ல் திருமதி. காமாட்சி ஜெயராமன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1972-73ல் திரு.ஆர். ஆறுமுகம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். ‘அ’வில் தொடங்கிய மேயர்கள் பட்டியல் இந்த ‘ஆ’வுடன் முடிவுற்றது.

1973 டிசம்பரில் மஸ்டர் ரோல் மோசடி தொடர்பாகத் திரு.எச்.வி. ஹண்டே கொடுத்த புகாரின் பேரில், சென்னை மாநக்ராட்சி கலைக்கப்பட்டது. அதன்பிறகு திரு. டி.வி. அந்தோணி இ.ஆ.ப. மாநகராட்சித் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

1968ல் மாநகராட்சித் தேர்தல் நடைபெற்றபோது, சென்னை மாநகரில் 120 வட்டங்களே இருந்தன. இப்போது அதன் எண்ணிக்கை 155 ஆக விரிவாகியிருக்கிறது.

## உள்ளாட்சித் தேர்தல்கள்

காங்கிரஸ் கட்சியானது 1969ல் பிளவுபட்டு, இந்திரா காங்கிரஸ் துளிர்த்தது. அதே போல் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் முரண்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அ.இ.அ.தி.மு.கவைத் தொடங்கி 1977ல் ஆட்சிபீடமேறினார்.

18 வயதுடையவர்களையெல்லாம் வாக்காளர்பட்டியலில் சேர்த்து, உள்ளாட்சித் தேர்தல்களை அவர் நடத்த முயன்றார். முதலில் ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்திட எண்ணிய அவர் - பெண்கள் ஆதிதிராவிடர்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கெல்லாம் இடஒதுக்கீடு செய்து தேர்தல் நடத்த முயன்றார்.

இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. மாண்புமிகு முதல்வராக இருந்த திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் இட ஒதுக்கீடு எதுவுமின்றி ஊராட்சி முதலான உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என்றார். அதன்படி 1986ல் தமிழ்நாட்டில் ஊராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

அத்தேர்தல்தான் முதன்முதல்18 வயதுடையோர் வாக்களித்த சிறப்பினைப் பெற்றது.



அப்போது நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக்கழகம் அதிக இடங்களைப் பெற்றது. அதே சமயம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்தேர்தலைப் பொறுத்தமட்டில் இ. காங்கிரஸ் அ.தி.மு.க கூட்டணிக்கு அதிக இடம் கிடைத்தது.

1986 ல் நடைபெற்ற அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலுக்குப் பிறகு, சரியாகப் பத்தாண்டு கழித்து இப்போதுதான் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழக அரசால் முறைப்படி தேர்தல் நடத்தப் பெற்றிருக்கிறது.

**மதுரை நகராட்சி**

1866ல் இந்தியாவில் நகரவை என்ற அமைப்பின் கீழ் சென்னை மாநகருக்கு அடுத்தபடியாக மதுரை மாநகர் விளங்கியது. நகரவை என்பது, இப்போதைய நகரியம் என்பதற்கு இணையானது எனலாம்.

அப்போதைய மதுரை மாநகர் 2.6 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 41,600 என்ற அளவில் மக்கள் தொகையும் உடையதாக இருந்தது.

அந்த நகரவையே பிறகு மாநகராட்சி எனப்பட்டது. வி.எச். லீவிங் என்பவர்தான் முதல் தலைவராக இருந்தார். அவருக்கு உதவியாக அமர்த்தப்பட்ட 14 உறுப்பினர்களும் 'ஆணையாளர்கள்' என்று குறிப்பிடப் பட்டார்கள்.

அந்த உறுப்பினர்கள் 1892-1920 ஆம் ஆண்டுகளிளெல்லாம் நடத்தப்பட்ட தேர்தல் மூலம் தேர்வு பெற்றனர்; அவர்களைத் தவிர வேறுசில உறுப்பினர்களை அரசும் நியமித்தது.

அதேபோல் 1969 ஆம் ஆண்டில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில், மதுரை மாவட்டத் தி.மு.கழகச் செயலாளராக இருந்த திரு.எஸ். முத்து அவர்கள் வெற்றி பெற்று, நகராட்சித் தலைவர் ஆனார்; துணைத் தலைவராகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஆனந்தம் அவர்கள் பொறுப்பேற்றார்.

**மதுரை மேயர்**

அதனையடுத்து, 1971 - ஆம் ஆண்டு, நகராட்சியாக இருந்த மதுரைக்கு மாநகராட்சி அந்தஸ்து அளிக்கப்பட்டது; மதுரையைச் சுற்றிலுமிருந்த 13 ஊராட்சிகளும் இதன் காரணமாக மதுரையோடு சேர்க்கப்பட்டன. வார்டுகள் எல்லாம் முறைப்படி பிரிக்கப்பட்டன.

இதற்குப் பின் ஏழாண்டுக்காலம் கழித்தே -அதாவது 1978 ஆம் ஆண்டில் மதுரை மாநகராட்சிக்கு முதன்முதலாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

அதற்கு 65 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்; ஆதிதிராவிட சமூகத்தார் 4 பேரும், பெண்கள் 5 பேரும், மாநகராட்சி உறுப்பினராக



அரசால் நியமிக்கப்பட்டார்கள். அதே ஆண்டில் இந்த 74 பேரும் பதவியேற்றார்கள்.

அப்போதெல்லாம் மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் பதவிக்காலம் ஆறாண்டுகளாக இருந்தது. அதே சமயம் நகரத் தந்தையின் பதவிக் காலம் 2 ஆண்டுகள் மட்டுமே என்ற நிலை.

நகராட்சித் தலைவராக இருந்த மதுரை எஸ். முத்து அவர்களே இரண்டாம் முறை

யாகவும் வெற்றி பெற்று வணக்கத்திற் குரிய மதுரை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

முதலில் தி.மு.க.விலும், பிறகு அ.தி.மு.க. விலும் இருந்த அவர் 1980 வரை இரண்டாண்டுக் காலமே மேயராகப் பதவி வகித்தார்.

துணைமேயராகத் திரு.கே.எஸ். சந்தானம் அவர்கள் இருந்தார்.

பிறகு மதுரை மேயராகத் திரு. எஸ்.கே. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு.எம். பட்டுராஜன் அவர்களும் - துணைமேயர் களாகத் திரு.கோ. நவநீத கிருஷ்ணன், திரு.எம். முனியசாமி ஆகியோரும் பதவி வகித்தனர்.

1984 ஜூலை 28 ஆம் தேதியுடன் மதுரை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்தது. அதன்பின் மாவட்ட ஆட்சித் தலைவரே மாநகராட்சித் தனி அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். மாநகராட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## புதிய மேயர்கள்

இவ்வாறு சென்னை மாநகராட்சியும், மதுரை மாநகராட்சியும் பல மேயர்களைக் கண்டுவிட்டன; ஆனால் மாநகராட்சி அந்தஸ்து பெற்றும், இதுவரை மேயரைக் காணாமலிருந்த திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகள் இப்போதுதான் முதன் முதலாக 'வணக்கத் திற்குரிய' மேயரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன.

## மறக்க முடியாதவை

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் 155 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 15 இலட்சத்து 10 ஆண்களும், 15 இலட்சத்து 6 ஆயிரத்து 262 பெண்களுமாக 30 இலட்சத்து 6 ஆயிரத்து 272 வாக்காளர்கள் உரிமை பெற்றிருந்தார்கள். அவர்களோடு, புதிதாக ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 286 பேரும் வாக்குரிமை பெற்றிருந்தனர். ஆக மொத்தத்தில் சென்னை மேயரையும் உறுப்பினர்களையும் தேர்ந் தெடுக்க 31 இலட்சத்து 19 ஆயிரத்து 558 பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர்.

> மானமும் அறிவும்தான் மனிதனுக்கு அழகு.
>
> –தந்தை பெரியார்

எண்ணாயிரம் பேர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்நாடு முழுமைக்குமாக அக்டோபர் 9,12 தேதிகளில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்கள் மூலம் மட்டும் 13,738 தலைவர்கள், ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 203 வார்டு உறுப்பினர்கள் என, 1.32 இலட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுமைக்குமாக 819 இடங்களில் அக்டோபர் 14,15 தேதிகளில் வாக்குகள் எண்ணப்பட்டன.

மாநகராட்சி மேயர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கவுன்சிலர்கள் அனைவரும் 25.10.1996 அன்று பதவியேற்றனர்.

இந்தத் தேர்தலில் ஒருவரே இரண்டு இடங்களில் போட்டியிட முடியாது என்ற நிலை வகுக்கப்பட்டிருந்தது. பொதுத் தேர்தலுக்கு இருந்தது போலவே, இந்த உள்ளாட்சித் தேர்தலுக்கும் இரண்டு பிரிவாகப் பார்வை யாளர்களர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் யாரானாலும், தேர்தல் பணிக்காக அரசு வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையர் அறிவித்திருந்தார். வாக்குச் சீட்டுகள் அச்சிடுதல் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான மற்ற பணிகள் போன்ற வற்றுக்காக மட்டும், 48 கோடி ரூபாய் வரை செலவாகும் என்றும் தெரிவித்திருந்தார்.

தேர்தல்கள் முடிவுற்றபின், அவர் விடுத்திருந்த அறிவிப்பொன்று நமக்குப் பெரும் மகிழ்வளிப்பதாக இருந்தது. ''ஒன்றிரண்டு ஊர்களில் நடைபெற்ற சிறு சிறு அசம்பாவிதங்களைத் தவிர, தேர்தல் அமைதி யாகவே நடந்து முடிந்தது.'' என்பதே அது.

– பி.எல் ராஜேந்திரன்



# அன்பு மகள் வளருகிறாள்

## கவலையும் வளர வேண்டுமா ?

# இன்றே கிஸான் விகாஸ் பத்திரத்தில் சேமியுங்கள்

## லட்சாதிபதி ஆகிடுங்கள்!

**மகளின் திருமணச் செலவுபற்றிய கவலையை விடுங்கள்.**

| ஆரம்ப முதலீடு | 5 1/2 ஆண்டுகளில் | 11 ஆண்டுகளில் | 16 1/2 ஆண்டுகளில் | 22 ஆண்டுகளில் |
|---|---|---|---|---|
| **Rs.5000** | Rs. 10000 | Rs. 20000 | Rs. 40000 | **Rs. 80000** |
| **Rs. 6250** | Rs. 12500 | Rs. 25000 | Rs. 50000 | **Rs. 100000** |
| **Rs. 10000** | Rs. 20000 | Rs. 40000 | Rs. 80000 | **Rs. 160000** |
| **Rs. 12500** | Rs. 25000 | Rs. 50000 | Rs. 100000 | **Rs. 200000** |

(ஒவ்வொரு 5 1/2 ஆண்டிலும் மறுமுதலீடு)

★ இலவசப் பரிசுக் கூப்பனும் உண்டு. சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் மற்றும் 249 பரிசுகள்

தொடர்பு கொள்க:

அனைத்து அஞ்சலகங்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
மற்றும் முகவர்கள்,
புதுக்கோட்டை

வ. கனகராஜ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
புதுக்கோட்டை

# மழை வெள்ளம்: முதல்வர் ஆணை

வங்கக்கடலில் உருவான புயல் சின்னம் பலவீனப்பட்ட போதிலும், தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடுமையான மழை வெள்ளத்தால் பலவிதமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன; சிலர் உயிரிழக்கவும் நேர்ந்திருக்கிறது. இவ்வாறு பெய்த மழையின் அளவு, அதனால் ஏற்பட்ட பலவகைச் சேதங்கள் குறித்த விவர அறிக்கையினை உடனே தயாரித்து அரசுக்கு அனுப்புமாறு - மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் ஆணையிட்டிருக்கிறார்.

## மாண்டோர் குடும்பத்தார்க்கு நிதி

மழை-வெள்ளம் காரணத்தால் ஏராளமான பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளதால் தமிழக அரசு நிவாரண நடவடிக்கையில் போர்க்கால நடவடிக்கை போல்தீவிரவேகம்மேற்கொண்டுள்ளது. இந்த மழை வெள்ளம் காரணமாகத் தமிழகமெங்கும் 21 பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிகிறது ஏராளமான கால்நடைகளும் மாண்டிருக்கின்றன.

இந்த மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர்க்கு விபத்துகளில் மாண்டோர்க்கு வழங்கப்படுவது போல் தலா ரூ. 15 ஆயிரம் தர மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்.

இதுவரை மழைகாரணமாக உயிரிழந்தோர்க்கு ரூ. 10 ஆயிரம் மட்டுமே தரப்பட்டு வந்தது; இப்போது அத்துடன் ரூ. 5 ஆயிரம் சேர்த்து வழங்கப்படுகிறது.

இம் மழையால், முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ஆயிரம் ரூபாயும், சரிபாதியளவில் சேதமுற்றவைகளுக்கு ரூ. 500ம் வழங்கப்படும்.

கால் நடைகளைப் பொறுத்தவரை ஆடு - செம்மறி ஆடு இறந்திருந்தால் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாயும், பசு, காளை, எருமை இறந்திருந்தால் ரூ. 5 ஆயிரம் வீதமும், பசு, எருமைக் கன்றுகளுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாயும் வழங்கப்படும். இது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்கொள்ளப்படும்.

உயிரிழந்தோரின் குடும்பத்தார்க்குப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ 50 ஆயிரம் பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஆந்திராவுக்கு உதவி

ஆந்திர மாநிலத்தில் வீசிய கடுமையான புயல், பெய்த கொடூரமான மழை ஆகியவற்றால் அந்த மாநிலம் பெரும் பாதிப்பிற்கு ஆளானது. இக்கொடுமையால் அங்கே ஏறத்தாழ 300 பேர் இறந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

அந்த அண்டை மாநில மக்களின் துயர்துடைக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளார்.

## வருந்துகிறோம்

**திரு. அ. கண்ணன்** அவர்கள் நம்முடைய 'தமிழரசு' அலுவலகத்தில் ஓராண்டு காலம் பணிபுரிந்தவர்; பின்னர் காமராசர் இல்லத்தின் காப்பாளராகப் பணியாற்றி வந்தார். 46 வயதுடைய அவர், சிங்கம்புணரியில் 2.10.1996 அன்று இயற்கை எய்தினார். திருமதி இராணி என்ற மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் அவருக்கு உண்டு.

**திரு.மு. முத்துக்காளத்தி** அவர்கள், நம் 'தமிழரசு' ஏட்டில் இணையாசிரியராகவும், அதன்பின் செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவராவார். சிறந்த எழுத்தாளராகவும், பதிப்பாளராகவும் விளங்கிய அவர், 15.10.1996 அன்று சென்னையில் காலமானார். பேராசிரியர் திருமதி சிவ அரசி என்னும் துணைவியாரும், ஒரு மகளும், இரண்டு புதல்வர்களும் அவருக்கு உண்டு.

மேற்கண்ட அன்பர்கள் இருவர் மறைவினாலும் கலங்கி நிற்கும் அவர்கள் குடும்பத்தாருக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# மாநகராட்சி மேயர்களின் வாழ்க்கைக் குறிப்பு

## திரு. மு.க. ஸ்டாலின்

[தி.மு.க]

**சென்னை மாநகராட்சி**
*(மொத்த வார்டுகள் 155)*
பெற்ற வாக்குகள் : 8,24,526

தி.மு.கழக இளைஞரணியின் மாநிலச் செயலாளராக உள்ள இவர் (வயது 44.) நெருக்கடி நிலை காலத்தில் கடுமையான சிறைத் தண்டனைக்கு ஆளானவர். பி.ஏ. பட்டம் பெற்றவர். இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சென்னை உட்பட 14 சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கிய 174 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள சென்னை மாநகராட்சியின் தந்தையாக, தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இவர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இரண்டாவது மகனாவார். இவரது மனைவி பெயர் துர்க்காவதி. இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள்.

## திரு.வி. கோபாலகிருஷ்ணன்

[த.மா.கா]

**கோயம்புத்தூர் மாநகராட்சி**
*(மொத்த வார்டுகள் - 60)*
பெற்ற மொத்த வாக்குகள் : 2,14,394

தி.மு.கழகக் கூட்டணி சார்பில், கோவை மாநகராட்சித் தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர் இவர். 1988ல், மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இவர் இருந்திருக்கிறார்; இவருடைய தந்தையார் திரு. ஆதிகேசவலு அவர்கள், எஸ்.என்.ஆர். அறக்கட்டளையின் அறங்காவலராக இருக்கிறார். கோயம்புத்தூர் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆகின்றன.

## திருமதி புனிதவல்லி

[த.மா.கா]

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**
*(மொத்த வார்டுகள் : 60)*
பெற்ற மொத்த வாக்குகள் : 1,55,623

தி.மு.கழகக் கூட்டணி ஆதரவுடன் நின்ற இவர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.எம். பழனியாண்டியின் மனைவி இவர். பி.ஏ. பட்டதாரி. சிறந்த சமூக சேவகி எனப் பெயரெடுத்தவர். சமூக நலவாரிய உறுப்பினராக இருந்தவர்; எக்ஸ்னோரா' அமைப்பின் தலைவியாக இருப்பவர். திருமதி புனிதவல்லி அவர்கள் திருச்சி மாநகராட்சியின் முதல் மேயர் என்கிற பெருமைக்கு உரியவராகிறார்.

## திரு. சூடாமணி

[தி.மு.க]

**சேலம் மாநகராட்சி**
*(மொத்த வார்டுகள் - 72)*
பெற்ற மொத்த வாக்குகள் : 1,56, 826

சேலம் மாநகராட்சித் தேர்தலில் பெரு வெற்றி பெற்றுள்ள டாக்டர் சூடாமணி அவர்களுக்கு 58 வயதாகிறது. சேலம், நகராட்சியாக இருந்த காலத்தில் ஐந்தாண்டுகாலம் நகராட்சித் தலைவராகப் பணியாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு. மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்றுள்ள இவர் தந்தையார் காலந்தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் கட்சி பேதமின்றி பொதுப்பணியாற்றும் ஆர்வலர்; தனக்கு அடுத்த வேட்பாளரைவிட இவர் 60 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றிருப்பதிலிருந்தே இது விளங்கும்.

## திருமதி. உமாமகேஸ்வரி

[தி.மு.க]

**திருநெல்வேலி மாநகராட்சி**
*(மொத்த வார்டுகள் - 55)*
பெற்ற மொத்த வாக்குகள் : 96, 671

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த இவருக்கு 39 வயதாகிறது. இவருடைய கணவர் திரு.கு. முருக சங்கரன், திண்டுக்கல்லில் உதவிக் கோட்டப் பொறியாளராகப் பணியாற்றிவருகிறார். பி.ஏ. பட்டம் பெற்றவர் திருமதி உமா மகேஸ்வரி.

இவருடைய பெற்றோர் - திரு. பூபாலன், திருமதி இரத்தினம் அம்மாள். இசையில் ஆர்வமுடைய இவருக்கு ஒரு புதல்வன், இரண்டு புதல்வியர் உண்டு.

## திரு.பெ. குழந்தைவேலு

[தி.மு.க]

**மதுரை மாநகராட்சி**

(மொத்த வார்டுகள் - 72)
பெற்ற மொத்த வாக்குகள் : 1,80,322

மதுரைமாநகராட்சிமேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திரு.பெ. குழந்தைவேலு அவர்கள் 56 வயதினர்; சட்டப் படிப்பு படித்துள்ள இவர் பெற்றோர் - திரு.பெருமாள். திருமதி அன்ன லட்சுமி ஆகியோராவர். இவருடைய மனைவி பெயர் திருமதி தனலட்சுமி, இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். தி.மு. கழக அவைத் தலைவராக இருக்கின்ற இவர், முன்பு மாணவர் அணி இணைச் செயலாளராகவும் இருந்திருக் கிறார்; சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

–அ. மதிமாறன்

### அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை:

சென்னை மாநகராட்சி மேயராக
**திரு. மு.க. ஸ்டாலின் பதவியேற்பு**

இரண்டாம் அட்டை :

**சென்னை மாநகராட்சி**

நான்காம் அட்டை :

**தமிழக மாநகராட்சி மேயர்கள்**

## உள்ளாட்சித் தேர்தல்: சில தகவல்கள்

சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகப் பொறுப்பேற்கவிருக்கும் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் 1.4.1953 ஆகும். இப்போது இவர் வயது 44; இவர் ஏற்கவிருக்கும் சென்னை மேயரின் எண்ணிக்கையும் 44 . இதுமட்டுமல்ல; இவர் தந்தையார் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வராகப் பதவியேற்றபோது அவர் வயதும் 44 ஆகும்.

திருநெல்வேலி மாநகராட்சி மேயர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள வணக்கத்திற்குரிய திருமதி. மு. உமாமகேசுவரி அவர்கள், தமிழ் நாட்டிலேயே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த முதல் மேயர் என்கிற சிறப்பைப் பெறுகிறார்.

இலண்டனை அடுத்து, இந்தியாவின் முதல் மாநகராட்சி என்ற பெருமையோடு இங்கேதான் மேயர் பதவி ஏற்படுத்தப்பட்டது.

சென்னை மாநகராட்சியாகுமுன், முதலில் நகராட்சித் தலைவராகப் பதவி வகித்த தமிழ்நாட்டுக்காரர் நீதிக்கட்சி நிறுவனர்களில் ஒருவரான வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி தியாகராயர் ஆவார்; அவருடைய சிலையை சென்னை மாநகராட்சி வளாகத்தில் காணலாம்.

இந்திய வைஸ்ராயாக இருந்த 'லார்டு ரிப்பன்' பெயரில் 1913ல் கட்டப்பட்ட 'வெள்ளை மாளிகை' எனப்படும், சென்னை மாநகராட்சி கட்டிடத்தில் உள்ள தீரர் சத்திய மூர்த்தி திருவுருவச் சிலை, அந்நாள் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களால், திரு. ஜி. குசேலர் (தி.மு.க) அவர்கள் மேயராக இருந்தபோது திறந்து வைக்கப்பட்டது.

உலகத்திலேயே சென்னை மேயர்தான் 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பெருமையினைப் பெறுகிறார். பம்பாய், கல்கத்தாவிலெல்லாம் சென்னை மாநகரைவிட அதிக மக்கள் உண்டெனினும், அங்கெல்லாம் இதுவரை மேயர் பதவிக்கென்று நேரடியாகத் தேர்தல் நடந்ததில்லை.

சென்னை நகர நிர்வாகம், 1688ல் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்டது; 1792ல் சென்னை நகராட்சி ஏற்படுத்தப்பட்டது. 1919ல் சென்னை நகராட்சிச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி சென்னையின் முதலாம் நகரத் தந்தையாக நியமிக்கப்பட்டவர் நேதியல் ஹிக்சன் என்ற வெள்ளையர் ஆவார்.

சென்னை மாநகராட்சியின் 'வணக்கத்திற்குரிய தமிழராக' முதல் மேயராக 1933ல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு வயது 29 தான். 1719 முதல் எரபாலு செட்டித் தெருவிலிருந்த சென்னை நகர நிர்வாக அலுவலகம், இவர் காலத்தில்தான் இப்போதுள்ள ரிப்பன் கட்டிடத்திற்கு இடம் மாறியது. மேயர் அணியும் 100 பவுன் தங்கச் சங்கிலி, மேயர் அமரும் நாற்காலி, காகிதஉறை நறுக்க மேயர் பயன்படுத்தும் வெள்ளிக் கத்தியெல்லாம் இவர் செய்து கொடுத்தவைகளேயாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் : எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# ஆசிரியர் மடல்

காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களும் டில்லியில் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தரப்படவேண்டும் என்பதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்த செய்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

குறுவை சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் – வடகிழக்குப் பருவமழை, காலத்தோடு கருணை காட்டத் தொடங்கியிருக்கிறது. அந்த நம்பிக்கையில், சம்பா நடவில் உற்சாகத்தோடு ஈடுபட்டுள்ளனர் தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்கள்.

தமிழகத்தில் காவிரி நதிநீர் பாயும் பரப்பளவு 20.208 இலட்சம் ஏக்கர்; அதே நேரத்தில், மேட்டூர் அணை பாசனப் பகுதி மட்டும் 21.588 இலட்சம் ஏக்கர். இதில் தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 15.889 இலட்சம் ஏக்கர் இருக்கிறது.

கடந்த இருபதாண்டு காலமாகவே பெரும் பிரச்சினையாகியுள்ள காவிரி நீரால் - உணவு உற்பத்தி, மின் உற்பத்தி, இலட்சோபலட்சம் மனித உழைப்பு நாட்கள் எல்லாம் தமிழ்நாட்டில் சீர்கேடு அடைந்துள்ளது. இந்நிலையில், காவிரி வடிநிலப் பகுதி விவசாயிகள் சம்பாப் பயிர் விளைவிக்க மேற்கொண்டுள்ள நம்பிக்கை நிறைவேற, தட்டுப்பாடற்ற காவிரி நீர் மிக மிக முக்கியமாகும். ''இருமாநில விவசாயிகளும் பாதிக்கப்படாதபடி நீர்ப்பங்கீடு அமையும்; இதில் தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்துள்ளமை எல்லோருக்கும் தெம்பளிப்பதாக இருக்கிறது.



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



திரு பெ. குழந்தைவேலு
- மதுரை



திரு வி. கோபாலகிருஷ்ணன்
- கோயம்புத்தூர்



திருமதி உமாமகேஸ்வரி
- திருநெல்வேலி

திருமதி புனிதவல்லி
- திருச்சிராப்பள்ளி



திரு சூடாமணி
- சேலம்

